
இதழ்: 64
ஒரு துளி
ரத்தம்
சுபா

## துவங்குமுன்...

தீக்குச்சி உரசப்பட்டது. சிகரெட்டைப் பற்ற வைத்தது. உதறி அணைக்கப்பட்டது. ஆஷ்ட்ரேயில் அகதியாக்கப்பட்டது. நரேந்திரன் புகை வளையத்தை ஊதினான்.

தீக்குச்சி உரசப்பட்டது. பைப்பைப் பற்ற வைத்தது. ராம்தாஸ் புகையை உள்ளுக்கு இழுத்தார். எதிரே உட்கார்ந்திருந்தவரைப் பார்த்தார்.

"சொல்லுங்கள்" என்றார்.

"என் பெயர் நீலமோகனன்"

நீலமோகனனுக்கு அதிகபட்சம் நாற்பது வயது இருக்கலாம். முன்தலையின் இருபுறமும் உள்வாங்கியிருந்த முடியும், முரட்டுத்தனமாய் உயிர்த்து நின்ற மீசையும் அங்கங்கே நரைக்கத் துவங்கியிருந்தன. உருட்டையான கண்களில் கலாச்சாரத்தை விட அதிகாரம் அதிகம் தென்பட்டது. தடித்த உதடுகள், கறுத்த பற்கள், கதர் சட்டையின் மெலிதான பாக்கெட் வழியே தென்பட்ட பீடிக்கட்டு உதிர்ந்திருந்தது.

"நீலமோகனன், மேனேஜர், மையழி குரூப் என்று விசிட்டிங் கார்டில் படித்து விட்டேன்... விஷயத்துக்கு வாருங்கள்..."

"இந்த மாதம் பதினெட்டாம் தேதி மெட்ராஸில் ரொம்ப கிராண்டா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்திய விழா பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும்."

"தெரியும்"

"இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு குழுக்கள் மெட்ராஸ் வரப்போகின்றன. தங்கள் பாடல்களையோ, நடனங்களையோ, சிறு நாடகங்களையோ மக்களுக்கு வழங்கப் போகின்றன..."

"தெரியும்..."

"கேரளாவிலிருந்து எங்களை அழைத்திருக்கிறார்கள்..."

"அப்படியா?"

"எங்கள் குரூப்பிற்கு நான்தான் மேனேஜர் என்பதால் எனக்கு சில பொறுப்புகள் அதிகமாகிவிட்டன..." நீலமோகனன் பெருமூச்சு விட்டார். "வாசுதேவனும், கோகுலகிருஷ்ணனும் என் 'ட்ரூப்பில்'தான் இருக்கிறார்கள்..."

"யார் வாசுதேவன்? யார் கோபாலகிருஷ்ணன்?"

"வா-சு-தே-வ-னை உங்களுக்குத் தெரியாதா?" நீலமோகனன் அவர்களை நசுக்கப்பட்ட கட்டெறும்பைப் பார்ப்பது போல் பார்த்தார். சதாம் உசேனையோ, மகாத்மா காந்தியையோ தெரியாது என்று சொல்லிவிட்டது போன்ற ஒரு திடுக்கிடல் அவர் குரலில் இருந்தது.

"வாசுதேவன் என்றால் கேரளாவில் சந்தோஷம் அலைமோதும்... அவன் கேரளாவின் பெருமை. எங்கள் நாட்டின் ராஜா... ஐ மீன்... கலைகளுக்கு ராஜா

"கதகளியில் இன்றைக்கு அவர்தான் நம்பர் ஒன். அவனும் கோகுலகிருஷ்ணனும் சேர்ந்து அமைத்திருக்கும் சில ராமாயண நடனங்களைப் பார்த்து வெளிநாட்டுக்காரர்கள் சொக்கிப் போயிருக்கிறார்கள். அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா இங்கிருந்தெல்லாம் அழைப்பு வந்திருக்கிறது. அடுத்த மாதம் நாங்கள் நியூயார்க் புறப்படுகிறோம். பாஸ்போர்ட், விசா எல்லாம் ரெடி..."

"வெரிகுட்...."

"இந்த சந்தர்ப்பத்தில்தான் எங்களுக்கு இன்னொரு எக்ஸலண்ட் நியூஸும் கிடைத்திருக்கிறது... டெல்லி தூர்தர்ஷனில் எங்களுடைய குரூப்பின் நடனங்களை ஐந்து வாரங்களுக்குத் தொடர்ந்து ஒளிபரப்ப நேஷனல் நெட்வொர்க்கில் இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். பன்னிரண்டு லட்ச ரூபாய் காண்ட்ராக்ட்..."

"வாவ்..."

"இவ்வளவு வெற்றிகள் இருந்தால், கூடவே என்ன இருக்கும்?"

"என்ன?"

"வெற்றி பெற முடியாதவர்களின் பொறாமை. எங்களைப் போல இன்னும் சில குரூப்கள் கேரளாவில் இருக்கின்றன. அவைகளுக்குக் கிடைக்காத வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறதே என்ற பொறாமை பற்றி எரிகிறது. எங்கள் வெற்றி முழுக்க முழுக்க வாசுதேவன் - கோகுல கிருஷ்ணன் இருவர் கையிலும்தான் இருக் கிறது. இவர்களை பத்திரமாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு என்மேல் இருக்கிறது. எத்தனை லட்ச ரூபாய் காண்ட்ராக்ட்களில் கையெழுத்துப் போட்டிருக்கிறேன், நான்..."

"நியாயம்தான்..."

"உங்களிடம் துப்பாக்கி இருக்கிறதா?"

"இருக்கிறது" என்றான் நரேந்திரன், புருவங்களைச் சுருக்கி, "யாரைச் சுட வேண்டும்?"

"நோ, நோ, பாதுகாப்பிற்காக வரும்போது நீங்கள் ஆயுதம் எடுத்து, வருவது நல்லது... எப்பொழுது என்ன ஆகும், யாருக்கு ஆபத்து வரும் என்றெல்லாம் சொல்ல முடிய வில்லை"

"துப்பாக்கி இருக்கிறது... அதைப் பயன்படுத்த லைசன்ஸ் இருக்கிறது... ஆனால் அதற்கெல்லாம் அவசியம் வரும் என்று நீங்கள் பயப்படுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது... நீங்கள் ஏதோ அதிகமான ஆபத்தை எதிர்பார்க்கிறீர்கள், ஆனால் எங்களிடம் சொல்லாமல் மறைக் கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது"

"நோ... நோ... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..." நீலமோகனன், தன் பாக்கெட்டிலிருந்து ஒரு வெள்ளை கைக்குட்டை எடுத்து நெற்றி, கழுத்து, பிடறி இங்கெல்லாம் ஒற்றி வியர்வையை சுத்தம் செய்து கொண்டார்.

"உங்களுக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணிவிடவா?"

"டிக்கெட்டா... மெட்ராஸில்தானே விழா?"



"ஆமாம்... ஆனால் இங்கே வந்து இறங் கியபின் பாதுகாப்பு கொடுத்தால் போதும் என்று நான் நினைக்கவில்லை. கேரளா விலிருந்தே எங்களுக்கு துணை வேண்டும் மிஸ்டர் நரேந்திரன்... நான் நாளைக்கு ஊர் திரும்புகிறேன்..."

"எங்கேயிருக்கிறது உங்கள் ஊர்?"

"வடக்குக் கேரளாவில்... தெய்யனூர் என்ற கிராமத்தில்... இப்போது தங்கியிருக் கிறோம்..."

"எங்களுக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணுங்கள்..."

"எத்தனை பேர்?"

"இரண்டே பேர். நரேந்திரன், வைஜயந்தி"

## ஒரே துரத்தல்! 1

பஸ் நிறுத்தத்திற்கு வந்தது!

நரேந்திரன் கைகளை உயர்த்தி சோம்பல் நெறித்தபோது, பஸ்ஸின் சூடான கூரை தென்பட்டது. அவசரமாக கையிறக்கினான். தங்களுடைய பெட்டிகளை சேர்த்துக் கொண்டான். அவன் தோளில் சாய்ந்து தூங்கி அப்போதுதான் விழித்திருந்த வைஜயந்தி, கண்களை கைக்குட்டையால் கசக்கிவிட்டு எழுந்தாள்.

"ஸாரி... ரொம்ப குலுக்கலான பயணம் இல்லை?" என்றார், நீலமோகனன், மன்னிப்புக் கோரும் குரலில்.

"வாஷிங் மெஷினில் போட்டு சுழற்றி எடுத்தது போல் இருக்கிறது" என்றான் நரேந்திரன். இடுப்பைப் பிடித்துக் கொண்டு, "எனக்கு ஆச்சரியமெல்லாம் இத்தனை குலுக்கல்களிலும் வைஜயந்தி எப்படி மூடிய கண்களைத் திறக்காமல் தூங்கிக் கொண்டு வந்தாள் என்பதுதான்..."

உரிந்து போயிருந்த பஸ் படிகளில் இறங் கினார்கள். வெயில் சுளீர் என்று அடித்தது. நரேந்திரன் மூச்சை இழுத்துப் பிடித்தான்.

அவர்கள் இறங்கியிருந்த இடம் சற்று மேடாக இருந்தது. அங்கிருந்து பார்த்த போது நான்குபுறமும் பச்சை படர்ந்த மலைகள் வட்டமிட்டிருந்தன. மலைகளின் நடுவே ஒரு கப்பை விட்டு வைத்தாற்போல பள்ளத்தாக்கு. பள்ளத்தாக்கின் பரப்பெங் கிலும் காற்றில் பறந்து உட்கார்ந்த காகிதக் குப்பை போல அங்கங்கே வீடுகள். அவற்றில் சரிவான சிகப்பு ஓடு கூரைகள்.

"ப்யூட்டிஃபுல்" என்றாள் வைஜயந்தி.

"பள்ளத்தாக்கில்... தெரிகிறதே கிராமம்... அதற்குப்பெயர்தான் தெய்யனூர்"

"அங்கேயா போகப் போகிறோம்?"

"ஆமாம்..."

"டாக்ஸி" என்று கைதட்டினாள் வைஜயந்தி.

நீலமோகனன் சிரித்தார். "டாக்ஸியெல் லாம் கிடையாதும்மா... இறங்க வேண்டியது தான்..."

"என்னது! இவ்வளவு ஆழத்தையும் இறங்கிப் போக வேண்டுமா?"

"ஒரே ஒரு வின்ச் இருக்கிறது... அதோ தெரிகிறது பாருங்கள்.. கீழே அங்கே இருக் கிற தைல ஃபாக்டரிக்கு அது போயிருக் கிறது. அதுமேலே ஏறி வர இன்னும் நாற்பது நிமிஷமாகும். அதுவரை யார் காத்திருப் பது?" என்றார் நீலமோகனன்.

"கமான்... லக்கேஜ்களையெல்லாம் நான் தானே தூக்கிக் கொண்டு வருகிறேன்... சும்மா கை வீசிக் கொண்டு இறங்கப் போகிறாய்... ஏறும்போதுதானே கஷ்டம்!" என்றான் நரேந்திரன்.

வைஜயந்தி ஒவ்வொரு அடியையும் ரசித்து இறங்கினாள். கிட்டத்தட்ட நாற்பது நிமிடங்கள் இறங்கிய பின்னர் மலைகள் உயர்ந்துவிட்டன. மலையின் பாதத்தில் விழுந்து கிடக்கும் துளசியைப் போல் அவர்கள் அண்ணாந்து பார்த்தார்கள். நீல மோகனன் சற்றும் அயராமல் இறங்கி வந்தது நரேந்திரனுக்கு சற்றே ஆச்சரியமாயிருந்தது!



சிலுசிலுவென்று சத்தம் வந்தது. எங் கிருந்தோ ஒரு வீச்சு குளிர்ந்த தென்றல் வந்து தொட்டுவிட்டுப் போனது.

"நரேன்... அங்கே பார் ஒரு சின்ன ஓடை...."

"தெய்யனூர் ஆறு" என்றார் நீலமோக னன். "அருவிஜலம் இங்கே பாய்ந்து ஓடி, கிராமத்தைத் தாண்டியதும் மறுபடியும் அருவியாக அடுத்த பள்ளத்தாக்கில் விழுகிறது. அதனால் இந்த ஓடையில் வேகம் அதிகம். முழங்கால் அளவுதான் தண்ணீர். ஆனால் தண்ணீரின் வேகத்தை நடந்து கடக்க முடியாது" நீலமோகன் இரண்டு கைகளையும் இரண்டுமுறை ஓங்கித் தட்டினார்.

ஓடையில் எங்கிருந்தோ ஒரு பரிசல் உற்பத்தியானது. மிதந்து வந்தது. பரிசல சுழன்ற வேகத்திலேயே நீரின் கோபம் புரிந்தது. பரிசலில் நின்றிருந்தவன் நீளமான மரக்கழி ஒன்றை தண்ணீரில் விட்டு பூமியில் குத்தி அதை உந்தி பரிசலை கரைக்கு நகர்த்தி வந்தான்.

பரிசலில் கவனமாக ஏறி அமர்ந்தார்கள். பரிசலின் பாரம் கூடி போனதாலோ என்னவோ அநாவசியமாக சுழல்வது நின்று போய் பரிசல் ஒழுங்காக நகரத் துவங்கியது.

கேரள சூரியன் நேரே அவர்கள் மீது தகித்தது. ஆனாலும் மலையின் நிழலும், நீரைத் தொட்டு வந்த காற்று வீசியதாலும் அந்த வெயில் பெரும்பொருட்டாக இல்லை.

வெகு சிறிய பரிசல் பயணம். அக் கரையை அடைந்து இரண்டு பெரிய கற்களின் நடுவே முட்டுக் கொடுத்து பரிசல் நிற்க அவர்கள் இறங்கினார்கள்.

காற்றில் வினோதமான மருந்துத் தைலத்தின் நெடி கலந்திருந்தது. இன்னும் சற்று நடந்து திரும்பியதும், நீலமோகனன் கையை உயர்த்தித் தடுத்தார். "நம் வீடு வந்து விட்டது"

அவர் சுட்டிக் காட்டிய வீடு இன்னும் ஐம்பதடி தூரத்தில் இருந்தது. அதன் கதவு திறந்து பிடிக்கப்பட்டு ஒரு பெண் நின்றிருந்தாள். அந்தச் சூழ்நிலையில் பட்டும், முண்டும் உடுத்தியிருந்தால் பொருத்தமாயிருக்கும். ஆனால் அவள் சிகப்புநிற பனியனும், வெள்ளைநிற ஸ்கர்ட்டும் அணிந்திருந்தாள். நீலமோகனனைப் பார்த்ததும் அவள் முகம் சற்று மலர்ந்தது.

"நான்ஸி... என் மனைவி..." என்றார் நீலமோகனன்.

நான்ஸிக்கு அதிகபட்சம் இருபத்தைந்து வயதுதான் இருக்கும். மேகம் தொடாத நிலவு போல முகம் சுந்தரமாக இருந்தது.

நரேந்திரனையும், வைஜயந்தியையும் நான்ஸியின் பார்வை, விம்பிள்டன் டென்னிஸ் பந்து போல் தாவித் தாவிப் பார்த்தது. முகத்தில் நட்புடன் புன்னகை தேடி ஏமாந்தான் நரேந்திரன். அவர்கள் நெருங்கியதும், நான்ஸி சரேலென்று திரும்பி உள்ளே மறைந்தாள்.

நீலமோகனன் ஒரு சிறு மன்னிப்புக் கோரும் புன்னகையுடன் அவர்களை உள்ளே அழைத்துப் போனார்.

நரேந்திரனும், வைஜயந்தியும் பைகளை இறக்கியதும், உடனே அவர்கள் சூழ்ந்தார்கள்.

"இதுதான் வாசுதேவன்..."

வாசுதேவன். ஐந்தரை அடி உயரம்தான் இருப்பான். சற்று பருமனான உடல்வாகு. அவன் உயரத்தைக் குறைத்துக் காட்டியது. வட்டமான முகம். இளமையான சருமம். அடர்த்தியில்லாத புருவங்கள். கண்கள் பெரிதாய் இருந்தன. மீசையில்லாததால் உதடுகள் சிவப்பாகத் தெரிந்தன. இவனுக்குப் பெண் வேடம் போட்டால் கனகச்சிதமாய்ப் பொருந்தும் என்று தோன்றியது. கதகளி என்பது சற்று முரட்டுத்தனமான நாட்டியம் என்று நரேந்திரனின் மனதில் பதிவாகியிருக்க, இவ்வளவு மென்மையான



வன் எப்படி நாட்டியத்தில் நம்பர் ஒன்னாக ஆனான் என்று ஆச்சரியமாயிருந்தது.

வாசுதேவன் 'நமஸ்காரம்' என்றான். உடலின் மென்மைக்கும், குரலின் ஆழமான ஆண்மைக்கும் பொருத்தமில்லை.

"இது கோகுலகிருஷ்ணன்..."

கோகுலகிருஷ்ணன் சற்று மெலிந்த தேகத்துடன் உயரமாய் இருந்தான். செம்பட்டையான தலைமுடி நெற்றியில் புரண்டிருந்தது. கண்கள் வாசுதேவனுடையதைப் போன்று பெரிதாய் இருந்தன. மீசை இல்லை. மெல்லிய உதடுகளும், வாயின் உட்புறமும் வெற்றிலையால் சிவந்திருந்தன. "ஹலோ" என்றான், வாயில் அடக்கிய வெற்றிலையுடன்.

"இது ஷாகுந்தலா - கோகுல்கிருஷ்ணனின் மனைவி"

ஷாகுந்தலா - சம்ஸ்க்ருத உச்சரிப்புடன் வர்ணிக்கத் தேவையில்லாதவளாக சாதாரணமாக இருந்தாள். அவளிடம் மட்டும்தான் நட்பான புன்னகை இருந்தது. கண்களில் சற்று வெட்கமும் இருந்தது.

"நான்ஸி... எங்களுக்குப் பசிக்கிறது" என்றார் நீலமோகனன்.

"சாப்பாடு ரெடி, குளித்து விட்டு வந்ததும் சாப்பிடலாம்" என்றாள் நான்ஸி உலர்ந்த குரலில்.

"நீலமோகனன்.." என்றாள் வைஜயந்தி. நான்ஸியின் பார்வை சுருக்கென்று அவள் மீது தைப்பதை நரேந்திரன் கவனித்தான்.

"என்ன வைஜயந்தி?"

"இவர்களையெல்லாம் எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தீர்கள்... எங்களை இவர்களுக்கு அறிமுகம் செய்யவில்லையே"

"ரியல்லி ஸாரி... இது வைஜயந்தி - இது நரேந்திரன்... மெட்ராஸ் ப்ரோக்ராமில் நமக்கு பாதுகாப்பாக இருக்கப் போகிறவர்கள்" என்றார் நீலமோகனன்.

"பாத்ரூம் எங்கே?" என்றான் நரேந்திரன்.

"பாத்ரூமா? பெண்களுக்குத்தான் பாத்

சூழ்... அதுகூட தட்டிப் போட்டு பிரித்த இடம்தான்...

"ஐயையோ, ஆண்களுக்கு?"

"கிணற்றடியில் சுதந்திரமாகக் குளிப் பதைத் விட்டுவிட்டு..." என்றார் நீலமேகவன், சிரித்துக்கொண்டே.

கிணற்று நீர் சுத்தமாயிருந்தது. வெயிலின் எதிராய் இதமாய் இருந்தது. நரேந்திரன் பக்கெட் பக்கெட்டாக மொண்டு ஊற்றிக் கொண்டான். தண்ணீரை தலையிலிருந்து சிலுசிலுவென்று உதறிய போது அந்த எண்ணம் வந்தது. அவனையே யாரோ கவனித்துக் கொண்டிருக்கிற உணர்வு.

நரேந்திரன் கண்களின் நீரைத் துடைத்து விட்டு மிக இயல்பாகத் திரும்பிப் பார்த்தான். கிச்சன் ஜன்னல் வழியே அவனையே வெறித்துக் கொண்டிருந்த நான்ஸி சரேலென அங்கிருந்து நகர்ந்து பார்வையிலிருந்து மறைவது தெரிந்தது.

நான்ஸி இயல்பான பெண்ணில்லை என்று மறுபடியும் தோன்றியது. அவளிடத்தில் ஏதோ ஒரு நெருப்பு இருந்தது. நரேந்திரனுக்கு அதன் வெப்பம் உறைப்பது போல் இருந்தது.

அதற்கப்புறம் அவன் அவ்வப்போது பார்வையை அதே ஜன்னல்புறம் வீசிய போது, நான்ஸி அங்கே இல்லை.



## ஒரு துளி ரத்தம்! 2

சாப்பிட்டு முடித்ததும், வைஜயந்தி சொன்னாள் "வா நரேன்... இந்த ஊரை ஒரு சின்ன ரவுண்ட் அடித்து விட்டு வரலாம். எனக்கு இந்த ஊர் ரொம்பப் பிடித்திருக்கிறது"

நரேந்திரன் கதவில்லாத திறந்த அலமாரித் தட்டில் பளபளத்த சீட்டுக்கட்டைப் பார்த்தான். "நீ போய் விட்டு வா, வைஜு... எனக்குப் போரடிக்கிறது..."



வைஜயந்தி அயரவில்லை. தன் கேமிராவைத் தோளில் மாட்டினாள். பச்சை நிற சுரிதாரும், மெஜந்தா நிற பைஜாமாவும் அவளுக்கு மிக எடுப்பாக இருந்தன. வைஜயந்தி வெளியேறியதும், நரேந்திரன் வாசுதேவன் பக்கம் திரும்பினான். "யார் யாருக்கு சீட்டு ஆடத் தெரியும்?"

வாசுதேவன், கோகுலகிருஷ்ணனின் முகத்தைப் பார்த்தான். கோகுலகிருஷ்ணன், நான்ஸியின் முகத்தை. அவளிடமிருந்து மிக மெல்லியத் தலையாட்டல் மூலம் உத்தரவு கிடைத்தது.

சீட்டுக்கட்டு எடுக்கப்பட்டது.

நரேந்திரன் கலைத்துப் போடத் துவங்கினான்.

வெளியே வைஜயந்தி சுற்றிச் சூழ்ந்திருந்த மலைகளைப் பார்த்தாள்.

வெயிலும் நிழலுமாய் படர்ந்திருந்த அந்த சூழலை புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற உந்துதல் எழுந்தது. வைஜயந்தி கேமிராவை உயர்த்தி க்ளிக்கினாள். மின்னலடித்தது.

வைஜயந்தி வியந்தாள். கேமிராவில் அவள் ஃப்ளாஷ் பொருத்தவில்லை. அப்புறம் ஏன் மின்னலடித்தது போன்றதொரு உணர்வு ஏற்பட்ட. கேமிராவை கழுத்தில் தொங்கவிட்டு அவள் பார்வையை எல்லா திக்கிலும் சுழற்றினாள்.

மீண்டும் மின்னலடித்து. இந்த முறை அதன் திசை புரிந்துவிட. வைஜயந்தி குறிப்பிட்டுப் பார்த்தாள்.

மின்னல் இல்லை, அது. சூரிய ஒளியை கண்ணாடி வைத்து பிரதிபலிப்பது போல்தான் இருந்தது. அவள் பார்த்த திசையில் சூரிய ஒளியை பிரதிபலித்த கண்ணாடிகள் எங்கேயிருந்தன என்று பார்க்க முடிந்தது. பைனாக்குலரின் இரண்டு லென்ஸ்கள்தான் அப்படி மின்னலை இறைந்திருந்தன.

பைனாக்குலரை கண்ணுக்கெதிரில் தூக்கிப் பிடித்திருந்தவன் ஒரு குதிரை மீது ஆரோகணித்திருந்தான். அவன் இந்தக் குறிப்பிட்ட வீட்டையே கவனிப்பதாகத் தோன்றியது. எதிர்மலையின் உயரத்தில் பாதியில் மலையில் வகிடு எடுத்து போடப் பட்ட பாதையில் மரங்களுக்கு இடையில் அந்த குதிரை நின்றிருந்து. வைஜயந்தி கேமிராவை உயர்த்தி அதன் லென்ஸ் வழியே ஜூம் பண்ணிப் பார்த்தபோது, குதிரையில் இருந்தவன் தெரிந்தான்.

வெள்ளை பேண்ட், வெள்ளை சட்டை, வெள்ளை ஷூக்கள், தலையில் நீலநிற தொப்பி, கண்களில் கறுப்புக் கண்ணாடி, அவன் முகத்தின் பெரும்பகுதியை அந்த பைனாக்குலர்கள் மறைத்தன.

அவனும் வைஜயந்தியைப் பார்த்திருக்க வேண்டும்.

வைஜயந்தி கையை வீசிக் காட்டினாள். பதிலுக்கு குதிரையிலிருந்தவனும் கைய சைத்துக் காட்டுவான் என்று நினைத்தாள். அவன் சரேலென குதிரையைத் திருப்பிக் கொண்டு மரங்களின் பின்னே மறைந்தான்.

வைஜயந்தி சற்று நேரம் அவன் நின்றிருந்த இடத்தையே பார்வையிட்டு விட்டு, மற்ற இடங்களைப் பார்வையிட நகர்ந்தாள்.

உள்ளே...

"ரம்மி அண்ட் டிக்..." என்று நரேந்திரன் விசிறியாய்ப் பிரித்துப் பிடித்திருந்த சீட்டுக்களை மல்லாத்தினான்.

"நரேன்... ஏதோ ட்ரிக் செய்கிறாய்... இல்லாவிட்டால் மூன்று கேம்களாக நீயே எப்படி டிக்ளேர் செய்ய முடிகிறது?" என்றார் நீலமோகனன்.

"சீட்டு விளையாட்டுக்கென்று எனக்கு ஒரு மச்சம் இருக்கிறது.." என்றான் நரேந்திரன். மறுபடி சீட்டுக்களைக் கலைத்துக் கொண்டே.



"சீட்டு விளையாட்டு போரடிக்கிறது" என்றாள் ஷாகுந்தலா.

"வேறு என்ன செய்யலாம் என்கிறீர்கள்?"

"கதகளி பார்க்கிறீர்களா? வீடியோ டேப்பில் ரெக்கார்ட் பண்ணியது இருக் கிறது"

"போடுங்கள்..." நரேந்திரன் சீட்டுக் களைச் சேகரித்து ஒதுக்கி விட்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்தான்.

ஷாகுந்தலா ஆர்வத்துடன் ஒரு கேசட்டை எடுத்து வி.சி.ஆரில் பொருத் தினாள். டி.வியை ஆன் செய்தாள்.

டம் டமர டமர டம் என்று தாளங்கள் முழங்கின. செவிப்பறைகளைக் குத்திக் கிழிக்கும் ஒலி அதிர்வுகள். ஏழ்மையான வெளிச்சத்தில் ஒரு அமெச்சூர் கேமிராமேன் பதிவு செய்திருந்த அந்த நாட்டியம் நரேந்திரனை அதிகம் கவரவில்லை. முகம் எங்கும் பெயிண்டைத் தீற்றி, கண்களில் கருமை பூசி, இரு கன்னங்களிலும், சிறு இறக்கைகள் போன்ற அமைப்பைப் பொருத்தி, தலையில் கிரீடம், காதுகளில் பாரமான தோடுகள், கழுத்தில் கனம் கன மான மாலைகள் இத்தனையும் போதா தென்று, மொடமொடவென்று பலூன் போல் ஊதப்பட்டு நிற்கும் பாவாடையும், எப்படி இத்தனையையும் சுமந்து கொண்டு இந்தக் குதி குதிக்கிறார்கள்?

இரண்டு கதகளி பாத்திரங்களும் சுழன்று சுழன்று ஆடினர். ருத்ரதாண்டவம் போல கோபம் மட்டுமே பிரதானமாய்த் தெரியும் அகன்ற விழிகளை இன்னும் அதிகமாக உருட்டினார்கள்.

"இதில் யார் வாசுதேவன் தெரிகிறதா?" என்றார் நீலமோகனன்.

"அம்பேல்" என்றான் நரேந்திரன் "உயரத்தில் வித்தியாசம் இருப்பதால் வேண்டுமானால் என்னால் சொல்லிவிட முடியும். மற்றபடி வெறும் முகங்களை வைத்து மட்டும் என்னால் எதுவும் சொல்ல

முடியாது. முகம் நிறைய வெள்ளையும், கறுப்பும், சிகப்புமாய் பெயிண்ட் அடித்திருக் கிறீர்கள். கண்கள் மட்டும்தான் தெரிகின் றன. இதை வைத்து எப்படி சொல்ல முடியும்? நான்ஸி, ஷாகுந்தலா இவர்களும் கதகளி ஆடுவார்களா?"

நீலமோகனன் நரேந்திரனை விசித்திர மாகப் பார்த்தார். நீ இப்படி முட்டாளாய் இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை என்பது போன்ற பார்வை.

கதகளி என்பது ஆண்களும், சில சமயம் வளர்ந்த பையன்களும் ஆடுவது. பெண்கள் ஆடும் வழக்கமில்லை...

"ராமாயணத்தில் சீதையாக அப்புறம் யார் நடிப்பார்கள்?"

ஆண்களிலேயே ஒருத்தன் பெண் வேடம் போடுவான். அவ்வளவுதான்"

"பரதநாட்டியத்தில் பெண்களுக்குத் தான் முதலிடம். இங்கே அதற்கு எதிராக இருக்கிறதே..."

"கேரளாவிலும் பெண்கள் இடம் பெறும் நாட்டியங்கள் இருக்கின்றன." என்றான் வாசுதேவன். "முக்கியமாய் மலைஜாதியினர், வட்டக்களி, தெய்வக்களி போன்ற டான்ஸ் களில் பெண்கள்தான் ஆடுவார்கள். அவர்க ளுடைய கிராமத்தில் திறந்தவெளியில் ஆடும் இந்த ஆட்டங்கள் சுவாரஸ்யமாய் இருக்கும். ஒரு பெண் வயதுக்கு வந்து விட்டால் வட்டக்களி. அவளுக்கு கல்யாணம் என்றால் வட்டக்களி. குழந்தை பிறந்தால் டான்ஸ், ஆள் செத்துப் போனால் டான்ஸ் என்று வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் டான்ஸ் உண்டு"

"டான்ஸைப் பற்றி நிறைய ஆராய்ந்திருக் கிறாய் போல?" என்றான் நரேந்திரன்.

வாசுதேவன் சற்றே வெட்கப்பட்டான். முகத்தை குனிந்து கொண்டான்.

"இதுதான் உங்கள் சொந்த ஊரா?" என்றான் நரேந்திரன், நீலமோகனனைப் பார்த்து.



உடன் அவர் முகம் சற்று சோர்ந்து போனது போல் தோன்றியது.

"இல்லை, நாங்கள் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர்கள்"

நரேந்திரன் முகத்தில் ஆச்சரியம் பதி வானது. "ஒரு நல்ல நகரத்தை விட்டு விட்டு போக்குவரத்து வசதி கூட இல்லாத இந்தக் கிராமத்தில் ஏன் வந்து தங்கியிருக் கிறீர்கள்?"

"பொறாமைக்காரர்களின் பார்வையிலி ருந்து மறைந்து இருக்கத்தான்" அவருடைய வார்த்தைகள் அவருக்கே நம்பிக்கை தந்தனவா என்று நரேந்திரன் யோசித்தான். அவர் சொன்னதற்கும் மேலே ஏதோ ஒரு முக்கியமான காரணம் இருக்க வேண்டும் என்று அவர் அவன் பார்வையை அடிக்கடி தவிர்த்தது வேறு அவனுள் சந்தேகத்தைக் கிளப்பியது.

"உங்களுக்கெல்லாம் பாதுகாப்பு தர வேண்டும் என்கிறீர்கள். ஆனால் அதே சமயம் என்னிடமிருந்து எதையோ மறைக் கிறீர்கள். உங்களுடைய உண்மையான எதிரிகள் யாராயிருக்கக் கூடும் என்று தெரியாமல் எப்படி உங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும்?"

நீலமோகனன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தார். சுற்றி இருந்தவர்களைப் பார்த் தார். நரேந்திரன் புறம் திரும்பினார்.

"எங்களுக்கு ஒரு மிரட்டல் கடிதம் வந்தது நரேன்..." எழுந்து தன் பெட்டியைத் திறந்தார். துணிகளையெல்லாம் விலக்கி, அடியிலிருந்து ஒரு கசங்கிய காகிதத்தை வெளியே எடுத்தார். நீளப் பிரித்து நரேந்திரனிடம் நீட்டினார்.

மலையாளத்தில் கிறுக்கப்பட்டிருந்தது. நரேந்திரனுக்குப் புரியவில்லை என்றதும் தமிழில் சொன்னார்.

"யாருக்கு என்ன காசு கொடுத்து இந்த வெளிநாட்டு சான்ஸ்களைப் பிடித்தாய்? என்னை விட்டு விட்டு நீ போய் விடுவாயா,

பார்க்கிறேன்... வாசுதேவனும், கோகுல கிருஷ்ணனும் சேர்ந்து தோன்றுவார்கள் என்றுதானே அத்தனை காண்ட்ராக்ட்க ளிலும் கையெழுத்து போட்டிருக்கிறாய்! வாசுதேவன் இருக்க மாட்டான். உன்னோடு வர..."

"யார் எழுதியிருக்கிறார்கள் இந்த மிரட்டல் கடிதத்தை?"

"யார் எழுதியிருந்தாலும், மிரட்டல் தெளிவாக இருக்கிறது" என்றான் கோகுல கிருஷ்ணன்.

கதவு திறந்து வைஜயந்தி விசிலடித்துக் கொண்டே வந்தாள். "எக்ஸலண்ட் ஸினரிங், நரேன்... முப்பத்தாறு பிலிமையும் தீர்த்து விட்டேன்"

"வெரிகுட்... சிவகாசியில் ஏதாவது காலண்டர் கம்பெனிக்கு விற்று விடு" என்றான் நரேந்திரன்.

"நாளைக்கு மதியம்தான் புறப்படுகி றோம். அதுவரை பொழுது எப்படி நகரப் போகிறதோ தெரியவில்லை" வைஜயந்தி சலிப்புடன் சொன்னாள்.

"சினிமா பார்க்கிறீர்களா?" என்றான், கோகுலகிருஷ்ணன்.

மாலை நேரம் வீணானது.

அந்த குரூப்பில் இருந்தவர்களுக்கு நடுவில் சொல்ல முடியாத நெருடல் ஏதுவோ இருந்தது என்று நரேந்திரனுக்குத் தோன்றியது. இன்னது என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானம் செய்தான்.

"வைஜ்... இன்றைக்கு சீக்கிரம் சாப்பிட்டு விட்டு சீக்கிரம் தூங்கப் போகிறேன்" என்றான் சலிப்பாக.

## ஒரு துளி ரத்தம்! 3

பகலில் அவ்வளவு உஷ்ணம் கக்கிய வீடா இது?

இரவில் மெலிதாகக் குளிர்ந்து. நரேந்



திரன் பாயில் சுருண்டு படுத்திருந்தான். வழக்கமான துடிப்பான வேலைகளுக்கு இடம் இல்லை. இந்த முறை, ஏதோ ஒரு டான்ஸ் ட்ரூப்போடு மத்தளம் தட்டுபவன் போல் பிக்னிக் போகிற வேலைதான்.

சற்று புரண்டு படுத்தான்.

அடுத்த அறையில் பெண்களுடன் வைஜயந்தி இந்நேரம் உறங்கியிருப்பாள். நரேந்திரன் கண்களைத் திறந்து பார்த்தான். ஜன்னலுக்கு வெளியே நிலா வெளிச்சம் ஒழுகிக் கொண்டிருந்தது. மரங்கள் காற்றில் விசிலடித்துக் கொண்டிருந்தன.

அவன் ரூம் கதவு மெல்ல இரண்டு முறை தட்டப்பட்டது.

வைஜயந்தியா. கில்லாடிதான் நீ. எல் லோரும் தூங்கியவுடன் சத்தம் போடாமல், எழுந்து வந்து விட்டாயா? வா, கொஞ்ச நேரம் ஜாலியாக என்று காற்றுடன் பேசிக் கொண்டே கதவைத்திறந்தான்.

உடன் உள்ளே நுழைந்த நான்ஸி அவசரத்தில் அவன் மீது மோதினாள்?

"நரேன்... அவரைக் காணவில்லை"

"எவரை?" என்றான் நரேந்திரன், லுங்கியை சரியாக இடுப்பில் நிறுத்தியபடி.

"என் ஹஸ்பெண்டை... ஆமாம்... வாசல் கதவு தாளிடப்படாமல் சாத்தியிருக்கிறது. எனக்கு பயமாயிருக்கிறது..." என்று அவன் கையைப் பிடித்தாள்.

அவசியமில்லாமல் அவன் மேல் அவள் நிற்றிக் கொண்டு நிற்பது போல் தோன்றி யது. அவளுடைய உடலின் வெப்பத்தை அவனால் உணர முடிந்தது.

"பாத்ரூம் போயிருக்கிறாரோ என் னவோ?"

"டார்ச் அடித்துக் கொண்டு போய் அங்கேயும் பார்த்து விட்டேன். இல்லை. பாருங்கள். என் இதயம் எப்படி படபட வென்று அடித்துக் கொள்கிறது!" என்று அவன் கையைப் பிடித்து வைத்துக் கொண்டாள்.

நரேந்திரனின் இதயம் அவளுடையதை விட வேகமாக அடித்தது. திருமதி நீலமோகனனா இப்படி நடந்து கொள்வது? மெல்லத் தன் கையை உருவிக் கொண்டான். தலையணைக்கடியிலிருந்து ரிவால்வரை எடுத்துக் கொண்டு டார்ச்சுடன் கதவுக்கு வெளியே போனான்.

நிலா, மேகங்களுக்குப் பின்னால் மறைந்திருந்தது.

எங்கோ மரம் சிலுசிலுத்தது. தூக்கம் வராத குரங்கு புரண்டு படுத்திருக்குமோ?

நரேந்திரனின் கண்கள் நான்குபுறமும் கலங்கரை விளக்கின் வெளிச்சம் போல் சுழன்றன.

“நீலமோகனன்...” என்று மெல்லிய குரலில் கூப்பிட்டான்.

இந்த முறை அசைவு தெளிவாய்க் கேட்டது. அவனுக்கு ஐம்பதடிக்கு முன்னால் இருந்த ஒரு புதர்க்காடு அசைந்தாற் போலிருந்தது.

நரேந்திரன் டார்ச்சை அணைத்தான். பதுங்கினான்.

‘ம்க்ம்’ என்ற முனகல் வந்தது. கீழே யாரோ தள்ளப்பட்டு, இன்னொரு உருவம் அந்த யாரோவின் மீது குனிந்திருந்த மாதிரி இருந்தது. நரேந்திரன் பாய்ந்தான்.

சரக்கென்று சட்டையைப் பிடித்து இழுத்தான்.

அந்த ஆள் உடன் விரைந்து எழுந்தான். அந்த இருட்டிலும் அவன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். முரட்டு ஜீன்ஸ் பேண்ட், முரட்டுச் சட்டை, எழுந்த வேகத்தில் வீசி இடது கையால் நரேந்திரனை அடித்தான்.

நரேந்திரன் அந்த அடியை நேரே முகத்தில் வாங்கியதால் சற்று பின் தள்ளப்பட்டு, கீழே இருந்த ஒரு வேர் தடுக்கி மல்லாந்தான். அவன் மறுபடி எழுந்தபோது, அந்த ஆள் புதரைக் கலைத்துக் கொண்டு ஓட ஆரம்பித்திருந்தான்.



“ஓடாதே... நில்... சுட்டு விடுவேன்...” நரேந்திரன் துப்பாக்கியை உயர்த்தினான்.

“வேண்டாம்...” கீழே கிடந்த நீலமோகனன் முனகினார். ஓடியவன் அவருடைய மார்பை மிதித்து விட்டுப் போனதுபோல் மூச்சைத் தொலைத்திருந்தார்.

நரேந்திரன் ஓடுபவனை மிரட்டுவதற்காக துப்பாக்கி விசையில் கை வைத்ததும், அவன் மீது பொதேல் என்று விழுந்தார் நீலமோகனன். “வேண்டாம், சுடாதே...”

நரேந்திரன் பாலன்ஸ் இழந்து, நிமிர்வதற்குள், தாக்கியவன் காணாமல் போயிருந்தான்.

நரேந்திரன் அவனைத் துரத்தலாமா என்று யோசித்தான். இந்த இருளில் அடர்ந்த மரங்களுக்கு நடுவில் அவனைத் தேடுவது புத்திசாலித்தனமான காரியமில்லை என்று தோன்றியது. ஆத்திரத்துடன் நீலமோகனனின் பக்கம் திரும்பினான். “ஏன் சார் தடுத்தீர்கள்?”

“வீட்டிற்கு வா, பேசிக் கொள்ளலாம்”

அவரிடம் எழுந்திருப்பதற்குக் கூட சக்தியில்லை. நரேந்திரன் அவரைப் பற்றி தோளில் சாய்த்துக் கொண்டான். வீட்டை நோக்கி மெல்ல நடந்தான்.

“என்ன சார் ஆயிற்று?” நரேந்திரன் அவரை நாற்காலியில் உட்கார்த்தினான். நான்ஸி பதறிக் கொண்டு ஒரு கைக்குட்டையைத் தண்ணீரில் நனைத்து அவர் காயங்களை ஒற்றி எடுக்க ஆரம்பித்தாள்.

அவர் மூஸ் மூஸ் என்று மூச்சுவிட்டார் “பாத்ரூமுக்குப் போனேனா, இருட்டில் நின்றிருந்தான் போலிருக்கிறது, என் மீது பாய்ந்து விட்டான்”

“யார் அவன்?”

“யாருக்குத் தெரியும்?” என்றார் தலையைக் குனிந்து கொண்டு.

“அவனை நீங்கள் முன்னே பின்னே பார்த்ததே இல்லையா?”

“ஊஹூம்”

"அப்புறம் ஏன் அவனை கடுவதற்கு நான் தயாரான போது, நீங்கள் தடுத்தீர்கள்?"

"என்ன நரேன் இப்படிக் கேட்கிறாய். நீ டுமில் என்று கூட்டால் இந்த கிராமத்திலிருக்கிற அத்தனை பேரும் விழித்துக் கொள்ள மாட்டார்களா? எல்லோரும் சூழ்ந்து கொண்டு என்ன ஏது என்று கேட்டு ஒவ்வொருத்தருக்கும் என்ன விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பாய்? வாசுதேவனும், கோகுலகிருஷ்ணனும் இங்கேதான் இருக்கிறார்கள் என்று தம்பட்டம் அடிக்கச் சொல்கிறாயா?"

"என்ன தப்பு அதில்?"

"ஐயையோ... உங்கள் செயின் எங்கே?" என்றாள் நான்ஸி.

நீலமோகனன் தன் வெறும் கழுத்தை ஒரு முறை தடவிவிட்டுக் கொண்டார். "கத்தியைக் காட்டிக் கேட்டான். கொடுத்து விட்டேன்" என்றார். அவர் ஒரு அரை விநாடி அதிகநேரம் கண்ணை மூடித்திறந்தாரோ என்று நரேந்திரனுக்கு சந்தேகமாய் இருந்தது.

"வந்தது சாதாரணத் திருடன்தான் என்கிறீர்களா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்... வாசுதேவன், கோகுலகிருஷ்ணனைப் பற்றி தெரிந்தவனாயிருந்தால், என்னுடன் அங்கே நேரத்தை வீணடித்துக் கொண்டிருந்திருக்க மாட்டான். நேரே அவர்களைத் தேடித்தான் வந்திருப்பான்..." பேசும்போது நரேந்திரனின் கண்களைப் பார்க்காமலேயே அவர் பேசினார். அது அவருடைய மானரிஸமோ என்று தோன்றியது.

உங்களிடம் செயினைப் பறித்துக் கொண்டவன் ஓடிப்போயிருப்பானே... எதற்காகக் கீழே தள்ளி தாக்கிக் கொண்டிருந்தான்?"

"என்னப்பா நீ, நான் கூச்சலிட்டு உதவிக்கு ஆளை அழைத்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவனுக்கு இருக்காதா? என் கைகளைக் கட்டி, வாயில்



துணி அடைக்கலாம் என்றுதான் அவன் முயற்சி செய்து கொண்டிருந்தான். அதற்குள் நல்ல வேளை நீ வந்து விட்டாய்"

"போலீஸில் ரிப்போர்ட் செய்ய வேண்டும் சார். அவர்களுக்கு இந்த ஏரியாவில் இந்த மாதிரி திருடர்கள் யார் யார் என்று தெரிந்திருக்கும். கண்டுபிடித்து உங்கள் நகையை மீட்டு விடுவார்கள்"

"போலீஸும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம்" என்றாள் நான்ஸி. "நாளைக்கு நாம ஊருக்குக் கிளம்ப வேண்டும் என்பதை மறந்து விட்டீர்களா, நரேன்? போலீஸிற்குப் போய் சாட்சி சொல்லி, விசாரணைக்கு இழுத்துப் பிடித்து விட்டால்? முக்கியமான புரோகிராம் இருக்கிறது, மெட்ராஸில்- போகிறது. இரண்டு பவுன் சங்கிலியோடு போயிற்றே... இவர் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லாமல்... இனிமேல் நீங்கள் தனியே வெளியே போக வேண்டாம்..."

"தூங்கிக் கொண்டிருப்பவர்கள் யாரையும் எழுப்பி விஷயம் சொல்ல வேண்டாம், நான்ஸி. அநாவசியமாய் பயந்து விடுவார்கள்"

"ம்" என்றாள். "தேங்க்யூ நரேன்..."

"பாத்ரூம் வந்தால் யாராயிருந்தாலும் என்னை எழுப்புங்கள்" என்றான், நரேந்திரன். படுக்கை இழுத்து கதவருகில் போட்டு.

மலை ஓரங்கள் பிங்க் நிறமாயின. சரேலென பொன்னை இறைத்தாற் போல மஞ்சளாயின. பட்சிகள், மிருகங்கள், எத்தனை ஜீவராசிகள் தூக்கம் கலையப் பெற்று சந்தோஷக் குரல் எழுப்பத் துவங்கி விட்டன.

நரேந்திரன் கிணற்றடியில் வாயில் பிரஷ்ஷுடன் இருந்தான்.

"நரேன், அந்த ஆள் கூலிங்கிளாஸ் போட்டிருந்தான் என்றா சொன்னாய்?"

"ஆம்" என்று தலையை ஆட்டினான் நரேந்திரன்.

"ராத்திரி நேரத்தில் கூட?"

"ஆம்"

"குதிரையில் வந்தானா?"

"என்னது?"

"குதிரை ஏதாவது அங்கு நின்றிருந்ததா?"

நரேந்திரன் வாயைக் கொப்பளித்து விட்டு வைஜயந்தியை விநோதமாகப் பார்த்தான்.

"நரேன், நேற்று குதிரை மீது ஒரு ஆள் உட்கார்ந்து இந்த வீட்டையே நோட்டமிடுவதைப் பார்த்தேன்"

"என்னது! என் முன்னாலேயே சொல்லவில்லை?"

"குதிரை மீது உட்கார்ந்து பைனாக்குலரால் பார்க்கிறவன் அழகை ரசிக்கிறானா, தப்பெண்ணத்தோடு நோட்டமிடுகிறானா என்று எப்படி தெரியும் நரேன்? அவனும் கூலிங்கிளாஸ் போட்டிருந்தான்..."

நரேந்திரன் டவலால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே வீட்டிற்குள் பிரவேசித்தான்.

சூடான காபியை டபராவில் விட்டு உறிஞ்சிக் கொண்டிருந்த நீலமோகனின் எதிரே போய் நின்றான். "இந்த ஊரில் பெரிய மனிதர் யார்? நாட்டாண்மை, பண்ணையார், பஞ்சாயத்துத் தலைவர் இந்த மாதிரி?"

"எதற்கு நரேன்?"

"இந்த ஊரில் யார் யார் குதிரை வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் வேண்டும் எனக்கு..."

நீலமோகனன் கண்களில் வியப்பைக் காட்டினார். "குதிரையா? குதிரை எதற்கு?"

"தெரிய வேண்டும்..."

"இரண்டு பேரோ, மூன்று பேரோ சொந்தமாய் வைத்திருக்கிறார்கள். இன்னும் சிலர் குதிரைகளை வாடகைக்கு விடுகிறார்கள்"

"வாடகைக்கா!"

விடுவது போல இங்கே குதிரைகளை வாடகைக்கு விடுகிறார்கள். மேலே ஏறி கடைத் தெருவிற்குப் போய் வர வேண்டுமென்றால், குதிரையை எடுத்துக் கொண்டுபோய் விடுவார்கள்..."

"சொந்தமாய்க் குதிரை வைத்திருப்பவர்கள், வாடகைக்கு குதிரை விடுபவர்கள் இரண்டு பேரைப் பற்றியும் தகவல் வேண்டும்?"

"எதற்கு என்று சொல்ல மாட்டியா?"

"நேற்று உங்களைத் தாக்கியவன் குதிரையில் வந்திருக்கலாம் என்பதுதான் யூகம்..."

"அட போப்பா... நானே அவனை மறந்து விட்டேன்... நீ இன்னமும் அவனைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டு!"

"நீங்கள் எதற்காக என்னை வரவழைத்தீர்கள்? உங்களுக்கெல்லாம் பாதுகாப்பு தர வேண்டும் என்று. உங்களைத் தாக்கியன் யாரென்று தெரிய வேண்டாமா?"

"நாம்தான் இன்னும் நான்கு, ஐந்து மணி நேரத்தில் இந்த ஊரையே காலி பண்ணப் போகிறோமே... அப்புறம் எதற்கு அந்தக் கவலை? வந்தவன் சாதாரணத் திருடன்... அவனுக்காக உன் நேரத்தை நீ வீணாக்க வேண்டாம்..."

"ஒரு கேஸை நம்பி என்னிடம் கொடுத்து விட்டால், அப்புறம் எது எதை எப்போது செய்ய வேண்டும் என்பது நான் முடிவெடுக்க வேண்டிய விஷயம். ஒவ்வொரு கட்டத்திலும் நீங்கள் குறுக்கிட்டுக் கொண்டிருப்பதாய் இருந்தால் என்னால் வேலை செய்யவே முடியாது..."

நீலமோகனின் முகத்து ரத்தமெல்லாம் வடிந்து போனதுபோல் நிறம் வெளிறி விட்டது.

"பிரவுன் நிறம் என்றா சொன்னீர்கள்?"

கேட்டவன் லாயத்தில் நின்றிருந்த குதிரைக்கு முகத்தில் துணிப்பையைக் கட்டிவிட்டுக் கொண்டிருந்தான்.

"ஆமாம்... கழுத்துக்கடியில் வெள்ளைத் திட்டுக்கள் இருந்தன"

"தேன்ராணி" என்றான் குதிரைக்காரன். "அந்தக் குதிரைக்குப் பெயர்தான் தேன்ராணி. அதை நேற்று காலை வாடகைக்கு எடுத்துப் போனான் ஒருத்தன். இரண்டு நாட்களுக்குப் பணம் கட்டி விட்டான்..."

"வாடகைக்கு எடுத்தவன் எப்படியிருந்தான்? வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட், வெள்ளை ஷூ அணிந்திருந்தானா?"

"ஆமாம்"

"கறுப்புக் கண்ணாடி?"

"அணிந்திருந்தான். அதைக் கழற்றவே இல்லை..."

"பெயர் என்ன?"

"என்னவோ வினோதமான பெயர்... புத்தகத்தில் எழுதியிருக்கிறான்... நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்... எனக்குப் படிக்கத் தெரியாது..."

நைந்து போன ஒரு நோட் புத்தகத்தை அவன் நீட்டினான். எச்சில் தொட்டுத் திருப்பிய முனைகளில் அழுக்கு ரேகைகள் நிரந்தரமாகத் தங்கி விட்டன.

தேன்ராணி என்ற பெயருக்கு எதிரில் இருந்த பெயர் சட்டென்று நினைவில் வைத்துக் கொள்கிற பெயராய்த் தோன்றவில்லை. "வி.நவேத்!" என்றான் நரேந்திரன். "பெங்காளிப் பெயர் மாதிரி இல்லை?"

"பெயரை விடு... அட்ரஸை நோட் பண்ணு..." என்றாள் வைஜயந்தி.

"ஏழு, திருமால் வீதி" என்றான் நரேந்திரன், "எங்கேயிருக்கிறதப்பா திருமால் வீதி?"

அவன் குதிரையை விட்டு விட்டு வெளியே வந்தான். கிழக்குப் புறம் இருந்த மலையைச் சுட்டிக் காட்டினான். "அங்கே பாருங்கள். மூன்று அருவிகள் பக்கத்துப் பக்கத்தில் விழுகிறதே. நாமம் போட்ட மாதிரி, அந்த இடத்தைத்தான் திருமால்புரம் என்று சொல்வார்கள். அங்கே நான்கைந்து வீடுகள் இருக்கின்றன. அங்கே போய் விசாரியுங்கள்..."

"மலை ஏற வேண்டுமா?"

"கொஞ்ச தூரம்"

"எனக்கு குதிரை வேண்டும்"

கறுப்புக் குதிரை, நல்ல உயரமாய், கம்பீரமாய் இருந்தது. அதன் உள்வாங்கிய வயிறும், பின்னங்கால் வளைவுகளில் வீசும் வாலும் நரேந்திரனுக்குப் பிடித்திருந்தன.

குதிரை மிக லாவகமாக மலையேறியது. அதன் குளம்புகள் பழக்கப்பட்ட ஏற்றத்தில் அநாயாசமாக வேகம் காட்டின.

வைஜயந்தி குறிப்பிட்டிருந்த இடத்திற்கு வந்ததும் நரேந்திரன் குதிரையை நிறுத்தினான், இறங்கினான்.

குதிரை பரிச்சயமான பச்சைப்புல்லை மேயத் துவங்கியது. அந்த இடத்தில் நின்று அந்த கோணத்தில் கீழே பார்த்தால் அவர்கள் தங்கியிருந்த வீடு தெரிந்தது. நரேந்திரன் பைனாக்குலர்களை கண்களுக்கு உயர்த்திக் கொண்டான். கண்ணாடி லென்ஸ்களை முன்னும் பின்னும் நகர்த்தி பிம்பத்தை தீட்டிக் கொண்டான்.

இப்போது கைகெட்டும் தூரத்தில் வீடு வந்து விட்டது. சிவந்த ஓடுகள் வேய்ந்த கூரை. கொல்லைப்புற பசுமை, வாழை மரங்களுக்கு நடுவிலிருந்த கிணறு எல்லாமே...

என்ன இது?

கோகுலகிருஷ்ணனின் மனைவி

ஷாகுந்தலா கிணற்றடியில் தோன்றினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். புடவைத் தலைப்பிலிருந்து சதுரமாய் எதையோ எடுத்தாள். அது வெளிச்சத்தை கணநேரம் பிரதிபலித்தது. குனிந்து அதைக் கிணற்றுக்குள் போட்டாள். விடுவிடுவென்று வீட்டிற்குள் போய் விட்டாள்.

நரேந்திரனுக்கு ஆச்சரியமாயிருந்தது. என்னவாய் இருக்கும் அது? புரியவில்லை?

பைனாக்குலரை இறக்கி மார்பில் ஓய்வெடுக்க விட்டு, முந்தைய தினம் அந்த 'நவேத்' குதிரையுடன் நின்றிருந்திருக்கக் கூடிய இடத்தை ஆராய்ந்தான்.

புல்தரை அங்காங்கே காயப்பட்டிருந்தது. நசுங்கியிருந்த செடிகள் வேரோடு சாய்க்கப்பட்டிருந்தன. செடிகளின் இலைகளில் காக்காய் எச்சம் போல வெள்ளையாய் என்ன இது?

கடித்துத் துப்பப்பட்ட குயிங்கம்.

நேற்று நின்றிருந்தவன் துப்பியதா, அதற்கு முன்னால் வேறு யாராவது துப்பியதா என்று தெரியவில்லை.

அங்கு வேறு எதுவும் கவனத்தில் வைத்துக் கொள்கிறாற் போல இல்லை.

நரேந்திரன் குதிரை மீது ஏறினான். திருமால்புரத்தை நோக்கித் திரும்பினான். உடன் நிறுத்தினான். குளம்போசை கேட்கவில்லை?

அவனுடைய குதிரையைத் தவிர இன்னொரு குதிரையின் குளம்போசை கேட்ட மாதிரி இருந்தது. குதிரையை மறுபடி நகர்த்தினான். இந்த முறை ஓசை கேட்கவில்லை. இருந்தாலும் அவனுக்கு சந்தேகம் விலகவில்லை. குதிரையை மெல்ல நகர்த்தினான். பத்தடி நகர்ந்தியிருப்பான். உலர்ந்த இலைகள் உடையும் ஓசை பின்னால் கேட்டது. சரேலென தன் குதிரையை நூற்றி எண்பது டிகிரி திருப்பினான்.

மரங்களுக்குப் பின்னால் நின்றிருந்த



அந்த பிரவுன் குதிரை தென்பட்டது. அதன் இருபுறமும் வெள்ளையாடைக் கால்கள்.

நரேந்திரன் வந்த வழியில் குதிரையை வேகமாக செலுத்தினான். உடன் பிரவுன் குதிரை மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டது. அதன் மீது ஆரோகணித்திருந்தவனை நரேந்திரனால் பார்க்க முடிந்தது. அவன் அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்ட போதிலும், அவனுடைய கறுப்புக் கண்ணாடியை நரேந்திரன் தவறவிடவில்லை.

பிரவுன் குதிரையும் அதன் மீது வீற்றிருந்த அந்த 'நவேத்'தும் இப்போது விலகி ஓடத் துவங்க, நரேந்திரன் தன் குதிரையின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

"ஸ்டாப்!" என்று கத்தினான் நரேந்திரன். "துப்பாக்கியால் சுட்டு அநாவசியமாக உன்னைக் காயப்படுத்த வேண்டாம் என்று பார்க்கிறேன்... நில்!"

நவேத் கேட்பதாயில்லை. குதிரையை இன்னும் விரட்டினான். நரேந்திரனுக்கு திடீரென்றுதான் அந்த யுக்தி தோன்றியது. குதிரையின் வேகத்தை மட்டுப்படுத்தி, கீழே குதித்தான். ஆனால் குதிரையின் முதுகைத் தட்டிவிட்டு, வேகமாய்ப் போகச் சொன்னான்.

குதிரை அவனை விட்டுவிட்டு தனியே முந்தைய குதிரையைத் துரத்தியது. நரேந்திரன் ஏற்றத்தின் பக்கவாட்டில் பாறைகளையும், செடிகளையும் பிடித்து வேகமாக ஏறி, அடுத்த பாதைக்கு வந்து விட்டான். நவேத் குதிரையோடு வந்தபோது குறுக்கே பாய்ந்தான்.

குதிரை மிரண்டது. முன்னங்கால்களைத் தூக்கியது. நரேந்திரன் அதன் பாதையிலிருந்து கணநேரத்தில் விலகி, நவேத்தின் கையைப் பற்றி கீழே இழுத்தான்.

நவேத் குதிரையிலிருந்து பிய்க்கப்பட்டு கீழே விழுந்தான். நரேந்திரனின் குதிரையும் வந்து சேர்ந்து விட்டது.

நவேத் நரேந்திரனிடமிருந்து உதறிக் கொண்டான். நரேந்திரன் கையை அவன் கன்னத்தில் வீசினான். கூலிங்கிளாஸ் கழன்றது. பறந்தது.

அவன் கோபத்துடன் நரேந்திரனைத் திரும்பிப் பார்த்தான்.

நரேந்திரன் திடுக்கிட்டான்.

நவேத்தின் வலது கண் இருக்க வேண்டிய இடத்தில் விழி இல்லை. இமையை இழுத்து வைத்து தைத்திருந்தது. அந்த கோரத்தை மறைப்பதற்காகத்தான் அவன் எப்பொழுதும் கறுப்புக் கண்ணாடி அணிகிறான் என்று தோன்றியது.

ஆனால் அவன் நரேந்திரனை விட வேகமாகச் செயல்பட்டான். நரேந்திரனை உந்தித் தள்ளினான். வெகு சரேலென்று அந்த சமயம் அங்கு வந்து சேர்ந்த நரேந்திரனின் குதிரை மீது தாவி ஏறினான். ஓடும் குதிரைகளில் ஏறி அவனுக்குப்பழக்கம் இருக்க வேண்டும். அவ்வளவு இயல்பாக அழகாகத் தாவி ஏறினான். குதிரை பறந்தது.

நரேந்திரன் மண்ணைத் தட்டிக் கொண்டான். தேன்ராணியைப் பிடித்து நிறுத்தி ஏறினான். மறுபடியும் குதிரை ரேஸா என்று நினைத்து அதை விரட்டினான். தேன்ராணிக்கு வேகம் போதவில்லை.

இரண்டு முனைகள் திரும்பியதும் நரேந்திரன் தேன்ராணியை இழுத்து நிறுத்தினான் காரணம் இருந்தது.

நவேத் தப்பிப் போயிருந்த நரேந்திரனுடைய கறுப்புக் குதிரை பாதையோரம் அனாதையாக நின்றிருந்தது.

நரேந்திரன் குதிரையிலிருந்து இறங்கினான். கறுப்புக் குதிரையின் அருகே சென்று இருபுறமும் பார்த்தான். ஒருபுறம் மலைச்சரிவு, மறுபுறம் ஏற்றம். இதில் எந்தப் பாதையை நவேத் தேர்ந்தெடுத்தான் என்று தெரியவில்லை. இருபுறமும் அடர்த்தியான மரங்கள் இருந்ததால் எங்கு வேண்டுமானாலும் அவன் ஒளிந்திருக்கலாம் என்று



தோன்றியது.

வாட்சைப் பார்த்தான். இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர்கள் எல்லோரும் சென்னை புறப்பட வேண்டிய நேரம். இப்போது இங்கே நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்க முடியாது என்று தோன்றியது.

நவேத்திற்கு இந்த நிலையில் ஒரே ஒரு தண்டனைதான் தர முடியும். நரேந்திரன் தன் கறுப்புக் குதிரையில் ஏறினான். பிரவுன் குதிரையையும் பின்னாலேயே இழுத்துக் கொண்டு இறங்கினான்.

இரண்டு குதிரைகளையும் குதிரைக்காரனிடம் ஒப்படைத்துவிட்டு (இந்த தேன்ராணி மேலே அநாதையாக நின்றிருந்த துப்பா) வீட்டிற்கு திரும்பியபோது, வாசலிலேயே காத்திருந்தார் நீலமோகனன்.

"எங்கே போய்விட்டாய் நரேன்? இன்னும் பத்து நிமிடத்தில் வின்ச் கார் கிளம்பப் போகிறது. அதிலேயே போய்விடலாம் என்று பார்த்தேன். சீக்கிரம் கிளம்பு"

"ஒன்மினிட். முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து விடுகிறேன்" நரேந்திரன் கொல்லைப்புறம் கிணற்றடிக்கு ஓடினான்.

"ஐயையோ!" என்று குரல் வந்தது அவனிடமிருந்து.

"என்ன... என்ன?"

"கிணற்றுச் சுவரில் என் வாட்சைக் கழற்றி வைத்தேன். வழுக்கிக் கொண்டு உள்ளே விழுந்து விட்டது. பன்னிரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள வாட்ச். இரண்டே நிமிடம் கொடுங்கள்"

சரசரவென்று டிரஸ்களைக் கழற்றிவிட்டு கிணற்றுக்குள் இறங்கினான் நரேந்திரன்.

மூன்று நிமிடங்கள் கழித்து அவன் மேலே வந்தபோது, "என்ன கிடைச்சுதா?" என்றார் நீலமோகனன்.

"பின்னே?" நரேந்திரன் ஈரம் சொட்டும் தலையுடன், தன் வாட்சை உயர்த்திக் காட்டினான் பெருமையாக.

## 5

கொச்சின் எக்ஸ்பிரஸ் சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குள் நுழைந்தபோது, சென்னை சூரியன் சாய்கோணத்தில் ப்ளாட்ஃபாரத்திற்கு வெளிச்ச ஈட்டிகளைப் பாய்ச்சியிருந்தான்.

நரேந்திரன், வாசுதேவன், நீலமோகனன், நான்ஸி நால்வரும் ஒரு கூப்பேயில், வைஜயந்தி, கோகுலகிருஷ்ணன், ஷாகுந்தலா மூவரும் அடுத்த கூப்பேயில்.

நான்ஸி அவனை அடிக்கண்ணால் பார்த்தாள். அந்தப் பார்வையில் சத்தியமாய் சகோதரத்துவம் இல்லை. முந்தின இரவு பயணத்தின்போதும் அவள் இரண்டு, மூன்று முறை கீழே இறங்கிப்போகும் போது, வேண்டுமென்றே புடவைத் தலைப்பை அவன் மீது புரளவிட்டாள் என்று தோன்றியது. ஒரு முறை ரயில் நிறுத்தத்திற்கு வந்தபோது, அதிகப்படியாய் தடுமாறி, அவன் மீது மொத்தமாய் விழுந்து 'ஸாரி' என்று சொன்னாள்.

நீலமோகனன் நிஜமாகவே தூங்குகிறாரா, இல்லை தூங்குவது போல் பாவனை செய்து கொண்டு அவர்களை நோட்டமிடுகிறாரா என்று நரேந்திரனுக்கு சந்தேகமாகவே இருந்தது.

இப்போது காலை வெயிலில் முந்தின இரவின் சபலங்கள் எல்லாம் களையப்பட்டவள் போல் தூய்மையான ஸ்தீரியாக கண்ணாடியில் முகம் பார்த்து கூந்தலை சரி செய்து கொண்டாள்.

ரயில் நிறுத்தத்திற்கு வந்ததும் அனைவரும் இறங்கினர். லக்கேஜ்களை எண்ணி ட்ராலியில் ஏற்றிக் கொண்டிருந்த போது, நரேந்திரனின் கண்களின் பக்கவாட்டில் ஏதோ அசைவது போல் உணர்ந்து திரும்பினான்.

அகலமான உயரமான தூண் அருகில்



நிறுத்தியிருந்த எடை பார்க்கும் மிஷினின் பின்னே அவன் முழுவதும் ஒளிந்து கொள்ள முடியாமல் தெரிந்தான்.

இதே ரயிலில்தான் வந்தானா இவன்?

அவனுடைய கறுப்புக் கண்ணாடி மாறியிருந்தது.

நவேத்!

நரேந்திரன் உஷாராகி திரும்புமுன், நவேத்தின் கை வெளிச்சத்திற்கு வந்தது. அந்தக் கையில் ஸ்வெட்டர் ஒன்று மடித்துப் போடப்பட்டிருந்தது. ஸ்வெட்டரின் மடிப்புகளுக்குள்ளிலிருந்து சிறிதளவு தெரிந்த போதிலும், அந்த உலோக வட்டம் நரேந்திரனுக்கு உடனே அடையாளம் புரிந்தது.

துப்பாக்கி!

அவன் வாசுதேவன், கோகுலகிருஷ்ணன் இருவர் மீதும் பாய்ந்து கீழே அழுத்தினான்.

துப்பாக்கி வெடித்தது.

"ஹம்மாவ்!" வயிற்றைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தாள். அவள் வயிற்றில் சிவப்புப்பூ பூத்தது.

"வைஜ்... இவளை கவனி... ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போ..." நரேந்திரன் நிமிர்ந்தான்.

அந்த எடை மெஷினை நோக்கிப் பாய்ந்தான்.

நவேத் ஓடத் துவங்கினான்.

திடீரென்று துப்பாக்கி வெடித்த சத்தம் மக்களைக் குழப்பிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

அங்கங்கே மக்கள் ஓடினர்.

குறுக்கே நிறைய பார்சல்களுடன் குறுக்கிட்ட ட்ராலியை மோதி, குப்புற விழுந்து, எழுந்து நரேந்திரன் சிறு குழந்தையை இடறி, ப்ளாட்ஃபாரத்திலிருந்து தண்டவாளத்தில் குதித்து மறுபடியும் ஏறிப் பாய்ந்து, அடுத்த ப்ளாட்ஃபாரத்தில் ஓடினான். கூட்டத்தின் நடுவே நவேத் வெகு சுலபமாக ஓடினான்.

"அவனைப் பிடியுங்கள்"

நரேந்திரன் கத்தினான்.

ஒரு போர்ட்டர் குறுக்கே கை நீட்டி, துப்பாக்கி பார்த்ததும் பதறிப் பின் வாங்கினான்.

தபால் துறையின் சிவப்பு நிற மெயில் வேனிலிருந்து இறக்கப்பட்டு கொண்டிருந்த தபால் மூட்டைகளில் இடறி அவன் ஓடினான். சரேலென இடதுபுறம் திரும்பினான்.

நரேந்திரன் அதே திசையில் ஓடியபோது, நவேந்தைக் காணவில்லை. ரயிலிருந்து இறங்கிப் போய்க் கொண்டிருந்த ஏராளமான மக்களில் அவன் சுலபமாகக் கலந்திருந் தான். நரேந்திரன் ஓடினான். அவனை எப் படியும் அடையாளம் கண்டு பிடித்து விட லாம் என்ற நம்பிக்கையுடன் அந்தக் கூட்டத் தை சுற்றி ஓடித் திரும்பிப் பார்த்தான்.

நவேந்தைக் காணவில்லை!

ரயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான். அங்கு தகவல்கள் தந்து அவர்களிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு, பிளாட்ஃபாரத்திற்கு மறுபடி ஓடினான்.

கூட்டம் கலைந்து வழிவிட, ஸ்ட்ரெச்சரில் நான்ஸி வந்து கொண்டிருந்தாள்.

"ஜி.ஹெச எதிரிலேயே இருக்கிறது. அங்கு அட்மிட் பண்ணுவோம். அப்புறம் வேண்டுமானால் பிரைவேட் நர்ஸிங் ஹோமிற்குப் போகலாம்" என்றான் நரேந்திரன். "வைஜ், வாசுதேவனையும், கோகுலகிருஷ்ணனையும், மற்றவர்களையும் நீ நேரே நம் ஆபீஸிற்கு அழைத்துப் போ... நான் போலீஸ் விவகாரங்களை முடித்து விட்டு வருகிறேன்..."

ஃபினாயில் நெடியும், மூத்திர நாற்றமும் கலந்து குழப்பமாய் காற்றை அசுத்தம் செய்திருந்தன.

காரிடாரின் சிமெண்ட் தரையில் சிவப்பு எச்சில் கறைகளை மிதிக்காமல் நரேந்திரன்



நின்றிருந்தான். மரபெஞ்சில் உட்கார்ந்திருந்த நீலமோகனன், தலையில் கை வைத்துத் தாங்கி அழுது கொண்டிருந்தார்.

ஒற்றைப் போலீஸ் கான்ஸ்டபிள் தொப்பியால் விசிறிக் கொண்டு நின்றார்.

வெள்ளை உடை இறக்கைப்போல் பறக்க டாக்டர் வெளியே வந்தார்.

நீலமோகனும், நரேந்திரனும் ஒரே சமயத்தில் அவரைச் சூழ்ந்தனர்.

"பிழைத்துக் கொள்வாள் என்று நினைக்கிறேன்" என்றார் டாக்டர். "வயிற்றில் இரைப்பையைக் கிழித்திருக்கிறது குண்டு. நிறைய ரத்தம் வீணாகிவிட்டது"

"என் உடம்பிலிருந்து எத்தனை ரத்தம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் டாக்டர். அவளைக் காப்பாற்றுங்கள்..." நீலமோகனனின் குரல் நடுங்கியது. கெஞ்சியது.

டாக்டர் அவர் தோளில் ஆதரவாகத் தட்டிவிட்டு நகர்ந்தார்.

"எனக்கு இந்த கவர்மெண்ட் ஆஸ்பத்திரி பிடிக்கவில்லை நரேன்.. ஏதாவதொரு பிரைவேட் நர்ஸிங் ஹோமிற்கு இவளை எடுத்துப் போனால்தான் காப்பாற்ற முடியும்"

"நான் பர்மிஷன் வாங்குகிறேன்" என்றான், நரேந்திரன். சற்று தயங்கிவிட்டு "சார், இன்னும் என்னிடம் நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள். நான்ஸியைச் சுட்டவன் தான் தெய்யனூர் கிராமத்தில் இரவில் உங்களைத் தாக்கியவன். உங்களுடைய தங்கச் செயினுக்காகத்தான் வந்தான் என்று நீங்கள் சொன்னது பச்சைப்பொய்"

"இல்லை நரேன்..." நீலமோகனன் நரேந்திரனின் கையைப் பிடித்து சத்தியம் செய்தார். "அவனை நான் முன்பின் பார்த்ததில்லை. ஒருவேளை நான்ஸிக்குத் தெரிந்தவனோ என்னவோ"

"உங்களுக்கு கல்யாணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகின்றன?"

"முழுசாய் ஒரு வருடம்தான் ஆகியிருக்கிறது. நீ பார்ப்பது புரிகிறது லேட் மேரேஜ்

இல்லை. எனக்கு நான்ஸி இரண்டாவது மனைவி. முதல் மனைவி பத்து வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டாள். குழந்தைகள் யாரும் கிடையாது எனக்கு. ஒரு விஸ்லேஸ் டான்ஸில் நான்ஸியைப் பார்த்தேன். பிடித்திருந்தது. கேட்டேன். அவளும் சரியென்றாள். கலப்புத் திருமணம்... அவளுடைய முன்கதையை பற்றி நான் அதிகம் கேட்டதில்லை. அவள் அனாதை என்று மட்டும் தெரியும்"

"வந்தவன் பெயர் நவேத்"

"நவேதா!" என்றார், "நவேத்' என்று ஒரு பையனைப் பற்றி நான்ஸி முன்பு சொல்லியிருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டவனாம். அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை"

"நவேத்தைப் பற்றி வேறு என்ன விபரம் தெரியும் உங்களுக்கு?"

"எந்த விவரமும் தெரியாது..." நீலமோகனன் தலையை இடதும் வலதுமாக ஆட்டினார்.

நரேந்திரன் கிணற்றிலிருந்து தான் கண்டெடுத்த பொருளைப் பற்றி நினைத்துக் கொண்டான்.

"போலீஸ் காவல் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் இங்கு இருங்கள்... அல்லது என்னுடன் வாருங்கள். நான் ஈகிள்ஸ்ஐ ஆபீஸ் போகிறேன்..." என்று அவன் சொன்னதும், நீலமோகனன் அவன் கைகளை அழுத்தினார்.

"இல்லை. நானும் வருகிறேன்... எனக்கு வாசுதேவனைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது"

"சரி கிளம்புங்கள்"

ஈகிள்ஸ்ஐ அலுவலகம்.

நரேந்திரனின் அறையில் ஒரு ஓரமாய் லக்கேஜ் குவிக்கப்பட்டிருந்தது. நாற்காலிகளில் அவர்கள் சிதறி உட்கார்ந்திருந்தார்கள். கோகுலகிருஷ்ணன், வாசுதேவன்,



ஷாகுந்தலா.

மூன்று முகங்களிலும் எதையோ தொலைத்துவிட்ட பயம் இருந்தது. புன்னகையோ, இயல்போ இல்லாமல் மூவரும் வெகு டென்ஷனுடன், மூடியைத் திறந்தால், பொங்கி வழிந்து விடுவார்கள் போல இருந்தார்கள்.

"நான்ஸிக்கென்ன ஆயிற்று?"

"பிழைத்து விடுவாளாம்..." என்றாள் நீலமோகனன். அவர்களுடைய முகங்களை உன்னிப்பாகப் பார்த்தார். "நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் இத்தனை நேரம்?"

அவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். "என்ன செய்தோம்? ஒன்றும் செய்யவில்லை. ஒருத்தரோடு ஒருத்தர் பேசிக் கொள்ளக்கூட இல்லை" என்றார் வாசுதேவன். "எனக்கு பயமாயிருக்கிறது, மோகனன்"

"இந்த நீலமோகனன் இருக்கிற மட்டிலும் நீ எதற்கும் பயப்படாதே" என்றார் அவர்.

வைஜயந்தி ஒரு ட்ரேயில் டீ கப்களை வைத்து எடுத்து வந்தாள். "வெல்கம் டூ மெட்ராஸ்"

"நீங்க ஸ்வாகதம் சொல்லும் அழகு ரொம்ப நல்லாயிருக்கிறது. ஊருக்குள் நுழைந்தவுடனேயே வயிற்றைப் பார்த்துச் சுடுகிறார்கள். யாரைப் பார்த்து சுட்டானோ பாவி, பாவம், நான்ஸி மாட்டிக் கொண்டாள்" என்றாள் ஷாகுந்தலா.

"கேரளக்காரர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? குளிக்காமல் சாப்பிட மாட்டோம்..." என்றான் கோகுலகிருஷ்ணன் டீயை மறுத்து, "எங்களுக்கு எந்த ஹோட்டலில் ரூம் போட்டிருக்கிறது?"

"ஹோட்டல் சுகன்யாவில்... டீ கூடவா சாப்பிடக்கூடாது?" என்று வற்புறுத்தினான் நரேந்திரன்.

டீ சாப்பிட்டார்கள்.

"ஏற்கனவே உங்களில் ஒருத்தர் சுடப்பட்

டிருப்பதால், போலீஸில் கேட்டால் எக்ஸ்ட்ரா பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வார்கள்.

"வேண்டாம் நரேன்... நீ மட்டும் இருந்தால் போதும்... வேறு எந்த செக்யூரிட்டியும் வேண்டாம்" என்றார் நீலமோகனன்.

"நாளைக்கு விழாவிற்கு மத்திய அமைச்சர் வருகிறார். அவர் ஒரு தடவை தலையாட்டி விட்டால் டெலிவிஷன் சீரியல் உடனே காசு கொடுக்கும் என்கிறார்கள். அவர் வரும் போது ஆடாமல் இருப்பது மடத்தனம் என்பதால்தான் திணறுகிறேன். இல்லையென்றால் மூட்டையைக் கட்டிக் கொண்டு கேரளா பக்கமே போய் விடுவோம்"

"நானும் அதேதான் யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றான் வாசுதேவன். "நாம் இந்த விழாவில் பங்கு பெற்றுத்தான் ஆக வேண்டுமா, சார்?"

"பயப்படாதே, வாசு... நரேன் இருக்கிறான்"

"இருந்தாலும்!"

"இதோபார், இதுதான் மெட்ராஸில் லாஸ்ட் ப்ரோக்ராம். இதற்கப்புறம் டெலிவிஷன் ரெக்கார்டிங், அப்புறம் அமெரிக்கா, இன்றைக்குப் போய் மனம் தளர்ந்தால் என்ன ஆவது? எத்தனை லட்சங்கள் இன்வால்வ் ஆகியிருக்கிறது என்று உனக்குத் தெரியாதா?"

"லட்சங்களைப் பற்றியே பேசுங்கள்... எங்கள் உயிருக்கு?"

"உயிருக்கு உத்திரவாதம் யாரால் தர முடியும், வாசு? ரோட்டோரம் நின்று பஜ்ஜி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறவன் பேரில், லாரி ஏறிக் கூடச் செத்துப் போயிருக்கிறான். காம் டவுன்... காம் டவுன்" நீலமோகனன் சற்று அதிகாரமும், சற்று கெஞ்சலும் குழைந்த குரலில் அழுத்தமாகப் பேசினார்.

நரேந்திரன் புறம் திரும்பினார்.

"நரேன் ஒரு டாக்ஸிக்கு சொல்லிவிடு... எல்லோரும் ஹோட்டலுக்குப் போய் விடுவோம்"





ஹோட்டல் சுகன்யா.

முதல் மாடியில் வரிசையாக மூன்று அறைகள் எடுக்கப்பட்டிருந்தன.

15 - கோகுலகிருஷ்ணன், ஷாகுந்தலா

16 - நரேந்திரன், வைஜயந்தி

17 - நீலமோகனன், வாசுதேவன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் இருந்தது ஹோட்டல். சுற்றிலும் உயரமான வேறு கட்டிடங்கள் இல்லாததால், காற்று சிறப்பாக வந்தது.

தன்னுடைய அறையிலிருந்த இருபுறமும் இருந்த அறைகளுக்குப் போகும் வண்ணம் பால்கனியில் வசதி இருப்பதை நரேந்திரன் கவனித்திருந்தான்.

இப்போது கதவைச் சாத்திக்கொண்டு உள்ளேயே இருக்கும்படி இரு அறைகளிலும் சொல்லியிருந்தான். கதவைத் திறந்து காபி சாப்பிட இறங்கினால் கூட அவனிடம் சொல்லிவிட்டுத்தான் செய்ய வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லியிருந்தான்.

"உன்னிடம் ஒன்று காட்டப் போகிறேன். காட்டப் போகிறேன் என்று ரொம்ப பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறாயே, என்ன நரேன். அது?" என்றாள் வைஜயந்தி கட்டிலில் உட்கார்ந்து, பின்னலைத் திருகி.

"கதவைச் சாத்திவிட்டு வருகிறேன்"

"ஏய்!"

"தெய்யனூர் கிணற்றுக்குள் ஷாகுந்தலா ரகசியமாய் எதையோ எறிந்தாள் என்றேனே. அதை நான் அள்ளிப் போட்டேன். பார்த்தால் அது ஒரு பிரேம் போட்ட ஒரு போட்டோ பார்க்கிறாயா அந்த போட்டோவை?"

கண்ணாடியை அகற்றி அந்தப் போட்டோவை மட்டும் தனியே எடுத்திருந்தான் நரேந்திரன்.

புகைப்படத்தை வைஜயந்தி பார்த்தாள்.

ஸ்டூடியோ, அல்லது ஒரு வீட்டின்

முகப்பறையில் எடுக்கப்பட்டிருந்தது படம். மெல்லிய சிகப்புத் திரையைப் பிரித்து ஜோடியாக நின்றிருந்தவர்களில் பெண்ணை அவளுக்கு உடனே அடையாளம் புரிந்தது.

சிகப்பும் நீலமும் கறுப்பும் கலந்த விநோதமான நவீன உடையில் கால்களில் சிகப்பு ஷூக்கள் போட்டு நின்றிருந்தவள் நான்ஸி. சற்றே வெட்கம் பூத்த விழிகளுடன் அவன் திரும்பிப் பார்க்க.

அவள் தோளில் கை ஊன்றி நின்றிருந்த இளைஞன் அவளுக்குப் புதிதாய் இருந்தான். பிரவுன் நிற தொப்பி அணிந்து, சிகப்பு பனியனும், நீல பேண்ட்டும், ஸ்போர்ட்ஸ் ஷூக்களும், சிம்லாக் கண்ணாடியும். அவன் முகத்திலிருந்தது என்ன சந்தோஷமா, வியப்பா என்று புரியவில்லை.

"யார் நரேன் இது?"

"இது ஸ்டூடியோவில் எடுக்கப்பட்ட படம்... பின்னால் பாலாஜி ஸ்டூடியோ, சென்னை - 14 என்று போட்டிருந்தது. பார் ஒரு ரப்பர் ஸ்டாம்ப், அங்கே போனால் ஏதாவது விபரம் கிடைக்கலாம்..."

"ஏன், நான்ஸியைக் கேட்டால்?"

"நான் படத்தைக் கண்டுபிடித்தது அவளுக்குத் தெரிய வேண்டாம். எதற்காக கல்லறை ரகசியமாக அதைத் தூக்கிப் போட்டாள் என்று நாமே கண்டுபிடித்தால் இன்னும் நல்லது..."

வைஜயந்தி அந்தப் புகைப்படத்தை தன் ஹேண்ட்பேகில் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

ஜாம்பஜார் வீதியில் இருந்தது பாலாஜி ஸ்டூடியோ.

கண்ணாடிக்குள்ளிலிருந்து ஒட்டப்பட்டிருந்த ராஜஸ்ரீ, காஞ்சனா, மஞ்சுளா போன்ற நடிகைகளின் கறுப்பு வெள்ளை புகைப் படங்கள் ஸ்டூடியோவின் வயதை சூசகமாகத் தெரிவித்தன.

பாஸ்போர்ட் போட்டோ ஒரு மணி நேரத்



தில் எடுத்துத் தரப்படும் என்று போர்டு வைத்த மேஜைக்குப் பின்னே உட்கார்ந்து நெகடிவ்களை டச்சப் பண்ணிக் கொண்டிருந்த வழுக்கையர் நிமிர்ந்தார்.

"யெஸ்?" என்றார்.

வைஜயந்தி தன்னிடமிருந்த ஈகிள்ஸ் ஐ விசிட்டிங் கார்டை முதலில் நீட்டினாள்.

"நீங்கள் வைஜயந்தி?"

"ஆமாம்..."

"அடியேன் உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமா?"

"அதற்காகத்தான் தேடி வந்திருக்கிறேன்" வைஜயந்தி அந்த புகைப்படத்தை எடுத்து அவர் மேஜை மேல் வைத்தாள்.

"யார் இவர்கள், தெரியுமா?"

பெயர்களை வேண்டுமானால், கண்டு பிடிக்கலாம் ரிஜிஸ்தாரிலிருந்து..." போட்டோவைத் திருப்பிப் பார்த்து அதில் குறிப்பிட்டிருந்த வரிசை எண்ணை வைத்து பில்புக்கை கண்டுபிடித்து "நான்ஸி, கேரளா என்றிருக்கிறது" என்றார்.

"அந்த ஆளுடைய பெயர்?"

"டாக்ஸியில் வந்து இறங்கினார்கள். டாக்ஸி வெயிட்டிங்கில் இருந்தது... இருவரும் லவ்வர்ஸ் போல் இருந்தார்கள். ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு... அவன் வைத்திருப்பது பொய் மீசை"

"பொய் மீசையா?"

"ஆமாம்... உங்களுக்கு மீசை வைத்தால் தான் நன்றாயிருக்கும் என்று அவனிடம் சொன்னாள். இந்த மீசையை ஒட்டவைத்தாள். தலையில் தொப்பியை மாட்டினாள். கண்ணாடியை மாட்டி விட்டாள். இப்போது தான், அழகாயிருக்கிறீர்கள். இந்த போட்டோவில் யாருக்கும் யாருக்கும் உங்களை அடையாளம் தெரியப் போவதில்லை என்றாள். அவளுக்கு இருந்த தைரியம் அந்த பையனுக்கு இல்லை வியர்த்து விட்டது. வீட்டுக்கு சொல்லாமல் கொள்ளாமல் ஓடி

வந்தவர்களாயிருக்க வேண்டும்... போட்டோ எடுத்தவுடன் டாக்ஸியில் ஏறிப்போய் விட்டார்கள்"

"ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிறதம்மா... இப்படி நீ வந்து கேள்வி கேட்பாய் என்று தெரிந்திருந்தால் அந்த டாக்ஸி நம்பரையும் பில்லிலேயே குறித்து வைத்திருப்பேன்."

வைஜயந்தி சிரித்தாள். "போட்டோவை எங்கே கொடுத்தீர்கள்?"

"மறுநாள் அந்த நான்ஸி மட்டும் வந்தாள். வாங்கிக் கொண்டு போய் விட்டாள்"

"வேறு எதையும் நீங்கள் மறக்கவில்லையே?"

அவர் சற்றே யோசித்து "இல்லை" என்றார்.

வைஜயந்தி அவருக்கு நன்றி சொல்லி விட்டு அந்தப் புகைப்படத்தை மறுபடி ஹேண்ட்பேக்கில் வைத்துப் புறப்பட்டாள்.

## 7

நரேந்திரன் கொட்டாவியை வெளியே விடுதலை செய்தான்.

வைஜயந்தி ஸ்டுடியோ போய் வந்த விவரங்களைக் கேட்டுக் கொண்ட பின்னும் அவனுக்கு எந்த விஷயமும் தெளிவாகியிருக்கவில்லை.

வாட்சைப் பார்த்தான்.

"வைஜ்... எனக்கு தூக்கம் வருகிறது... நீலமோகனன் நான்ஸியோடு நர்ஸிங் ஹோமிலேயே தங்கிவிட்டார். வாசுதேவன் தனியாக இருக்கிறான். அவனுக்கு நான் துணையாகப் படுக்கிறேன். நீ போய் கோகுலகிருஷ்ணன் ஷாகுந்தலாவிற்கு காவலாய் இரு..."

"ஜோடியாய் அவர்கள் இருக்கும் அறைக்கு நான் எப்படி நரேன்"

"இப்போது ஜோடி, ஜாடி பற்றியெல்லாம் யோசிக்க அவகாசம் இல்லை. அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய



பொறுப்பு... வெட்கப்படாமல் போ..."

நரேந்திரன் வாசுதேவன் ரூமிற்குள் கதவைத் தட்டி விட்டு நுழைந்தான்.

வாசுதேவன் மிகவும் படபடப்பாக இருப்பது போல் தோன்றியது. நொடிக்கொரு தடவை எழுந்து உட்கார்ந்து தலையை தடவிக் கொள்வதும், வியர்வையை ஒற்றிக் கொள்வதும்...

"என்ன வாசு?"

"நாளைக்கு பர்ஃபாமன்ஸ் இருக்கிறது... அதை நினைத்துக் கொஞ்சம் டென்ஷன்"

"கதகளி ஒன்றும் உனக்கு புதிதில்லையே... அப்புறம் எதற்கு டென்ஷன்?"

"மினிஸ்டர் வரப்போகிறார்... பார்க்கப் போகிறார்... இந்தியாவிலிருந்து வந்து ஆடும் மற்றவர்களுக்கு இணையாக நாமும் பேர் வாங்க வேண்டுமே என்ற பயம்தான்"

"டோண்ட் ஒர்ரி... தூள் கிளப்பப் போகிறாய்"

ஜன்னல் புறம் ஏதோ அசைந்தது போல் இருந்தது. நரேந்திரனுக்கு. கிட்டே போய்ப் பார்த்தான்.

முதல் மாடி வரை வளர விட்டிருந்த க்ரோட்டன்ஸ் கொடிகளில் ஒன்று காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

"ஜன்னல் கதவைச் சாத்தி விடவா நரேன்?"

"பீச் காற்று அப்புறம் எப்படி உள்ளே வரும்? கவலைப்படாதே. இங்கே பார்..." நரேந்திரன் இடுப்புத் துப்பாக்கியை எடுத்துக் காண்பித்தான். "பயப்பட ஒன்றுமில்லை..." என்றான்.

வெளியே இருள் சூழ்ந்திருந்தது. பெரும்பாலான அறைகளில் விளக்கணைந்து விட்டது.

மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது.

"குட் நைட்" என்றான் வாசுதேவன், கட்டிலில் படுத்து கழுத்து வரை பெட்ஷீட்டை இழுத்துக் கொண்டு.

நரேந்திரன் பாத்ரூமிற்குள் நுழைந்தான்.

கதவைத் தாளிட்டான்.

"ஓவ... வேண்டாம்" என்று வாசுதேவனுடைய குரல் பயத்துடன் பலகீனமாக ஒலித்தது. நரேந்திரன் பாத்ரூம் கதவை மோதினான். தாழ்ப்பாள் விலகவில்லை. ரூம் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. யாரோ அறைக்குள் வந்திருக்கிறார்கள். வாசுதேவனை மிரட்டுகிறார்கள். ஒருவேளை வெளியே இழுத்துக் கொண்டு போகிறார்கள்.

நரேந்திரனின் உடல் பதறியது. கதவை இன்னொரு முறை மோதினான்.

முட்டாள். இது பாத்ரூம் கதவு. உள்புறமாயத் திறக்கும் கதவு. நீ மோதினால் புண்ணியமில்லை. இழு... இழு...

நரேந்திரனுக்கு அந்த ஞானோதயம் வந்ததும், சுவரில் கால்களை அழுத்தி ஊன்றி கதவைப் பிடித்து முழு மூச்சுடன் இழுத்தான். திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் கதவு திறக்க, இழுத்த வேகத்தில் அவன் பின்புறம் போய் விழுந்தான். வாஷ்பேஸின் நொறுங்கியது.

"என்ன நரேன்?" என்றாள் தாழ்ப்பாளைத் திறந்து விட்டிருந்த வைஜயந்தி. "கதவை இடிக்கும் சத்தம் கேட்டு பால்கனி வழியே ஓடி வந்தேன்"

நரேந்திரன் ஈரமாக எழுந்தான். "வைஜ், வாசுதேவனை யாரோ கடத்திப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். நான் போகிறேன்... இருப்பவர்களை நீ பத்திரமாகப் பார்த்துக் கொள்"

நரேந்திரன் காரிடாரில் ஓடினான். படிகளில் தாவி இறங்கினான். ஹோட்டலுக்கு வெளியே கார்ப்பார்க்கிங் அருகே அவர்கள் தெரிந்தார்கள். வாசுதேவனைப் பின்னாலிருந்து பார்த்த போதே அடையாளம் புரிந்தது. கூட இருந்தவன் யார் என்று தெரியவில்லை. நரேந்திரன் ஹோட்டலின் கண்ணாடிக் கதவுகளை அடையுமுன் கார் கிளம்பி விருட்டென்று அவுட்கேட்



வழியே வெளியேறியது. நரேந்திரன் ஓடினான். தன் புல்லட்டில் தாவி ஏறினான். சாவிகளைப் பொருத்தி முதல் உதையிலேயே தட் தடதட என்று கிளம்பியது.

கிட்டத்தட்ட சரிந்து எழுந்து கேட்டை அடைந்தான். அப்போதுதான் மின்னல் வேகத்தில் கடந்து போயிருந்த காரைக் கண்டு பிரமித்திருந்த வாட்ச்மேன் அருகே பிரேக் அடித்தான். "இப்போது ஒரு கார் போயிற்றே, அது எந்தப்பக்கம் திரும்பியது?"

"ஏன் சார், ஏதாவது டேன்ஜரா? காரில் கூலிங்கிளாஸ் போட்டு ஒருத்தன் இன்னொருத்தனை துப்பாக்கியால் மிரட்டிக் கொண்டிருந்தானா?"

"எந்த ஸைடில் கார் திரும்பியது?"

"இதோ இந்த ரைட்டில் சார்..."

நரேந்திரன் புல்லட்டை சரித்து திருப்பினான்.

தெருமுனையில் அந்த ஃபியட்டின் இரண்டு சிகப்பு விளக்குகள் தெரிந்தன. நரேந்திரன் புல்லட்டின் வேகத்தை அதிகரித்தான்.

அவனைப் பார்த்ததும், கார் இன்னும் வேகம் பிடித்தது.

இன்னொரு இடது சந்தில் நுழைந்தது. நரேந்திரன் திரும்பிய போது காரைக் காணவில்லை.

அங்கு குறுக்கில் நிறைய சந்துகள் இடதும் வலதுமாகப் பிரிந்தன. ஃபியட் எந்தப் பக்கம் நுழைந்தது என்று தெரியவில்லை. நரேந்திரன் ஒவ்வொரு தெருவாக வட்டமிட்டு வட்டத்தை குறுக்கிக் கொண்டே வர தீர்மானித்தான்.

முதல் வட்டம் அஜந்தா ஹோட்டல் லாயிட்ஸ் ரோடு, வி.எம்.தெரு... இரண்டாவது வட்டம் வி.எம். தெருவிலிருந்து பிரியும் அடுத்த சந்து, அதற்கப்புறம்... காம்பவுண்டுகளினுள்ளே பார்வையைப் பதித்துக் கொண்டே ஓட்டினான். எங்கும் அந்தக் காரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

திடீரென்று கவலை பிடித்துக் கொண்டது.

என்ன அற்பத்தனமாக மிஸ் பண்ணி விட்டேன்! ஆஞ்சநேயா, இதுதான் நீ எனக்குக் காட்டும் ஆசீர்வாதமா?

புல்லட்டை நிழலில் நிறுத்தினான்.

இறங்கினான்.

ர்ர் என்ற சப்தம் வந்தது.

ஃபியட் கார். அவன் நின்றிருந்த இடத்திலிருந்து ஐம்பது மீட்டர் தள்ளி இரண்டு சந்துகள் பிரியும் அந்த சந்திப்பில் அதே ஃபியட் கார் நரேந்திரனுக்குப் போக்கு காட்டி எங்காவது ஒளிந்திருக்க வேண்டும். இப்போது அவன் போய்விட்டான் என்று நினைத்து புறப்பட்டு விட்டது.

நரேந்திரன் புல்லட்டில் பாய்ந்து ஏறினான். அதைக் கிளப்பாமல் தெரு முனை வரை வேகமாய்த் தள்ளினான்.

ஃபியட் ஒரு வீட்டின் முன் நின்றது. டிரைவர் இறங்கி கேட்டை திறக்க, வாசுதேவனும், இப்போது கூட இருந்த இன்னொரு ஆள் யாரென்று புரிந்தது. 'நவேத்' வாசுதேவனை ஒட்டி அவன் நடந்ததைப் பார்த்தால் துப்பாக்கியை அவன் முதுகில் பதித்திருக்க வேண்டும்.

நரேந்திரன் நிழலிலேயே நின்றிருந்தான்.

இருபது நிமிடங்கள் ீித்து நவேத் மட்டும் தனியே வந்தான். கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். காரின் முன்புறம் டிரைவரோடு ஏறிகொண்டான். கார் விருட்டென்று புறப்பட்டது.

நரேந்திரன் இன்னமும் ஐந்து நிமிடங்கள் கொடுத்தான்.

அந்த குறிப்பிட்ட வீட்டை நெருங்கினான். கேட்டைத் திறந்தான். நேரெதிரே மாடிப்படிகள் ஏறின. வீட்டின் கீழ்ப்போர்ஷனையும், மாடிப் போர்ஷனையும் தனித்தனியே பிரிக்கும் விதத்தில் இடையில் சின்ன காம்பவுண்டு சுவர்.

நரேந்திரன் படிகளில் ஏறினான்.



அது இரண்டாகத் திறக்கும் மரக்கதவுகளில் கொண்டு விட்டது.

பூட்டு நரேந்திரனுக்கு சவால் விடவில்லை.

சுலபமாய்த் திறந்து உள்ளே நுழைந்தான். கையில் துப்பாக்கி.

'ம்ம்ம்கம்ம்' என்ற முனகல் அறை மூலைகளிலிருந்து வந்தது.

நரேந்திரன் தன் பென்டார்ச்சை அடித்தான்.

வாசுதேவன் கைகள் கட்டப்பட்டு, வாயில் துணிப்பந்து செருகி அடைக்கப்பட்டிருந்தது.

நரேந்திரன் அவனை விடுத்து அறையை சுற்றிலும் பார்த்தான்.

அது ஒற்றை அறை போர்ஷன். கொடியில் ஒரு சட்டை தொங்கியது. ஸ்வெட்டர் தொங்கியது. தரையில் சுவரை ஒட்டி ஒரு துணிப்பை. துணிப்பையை ஆராய்ந்ததில் நவேத் அணிந்த, அணியவிருந்த உடைகள், கொஞ்சம் பணம், கூடவே ஒரு பேப்பர், பேப்பர் இல்லை, கடிதம்.

நரேந்திரன் டார்ச் வெளிச்சத்தில் அதைப் படித்தான். கடிதம் ஆங்கிலத்தில் இருந்தது.

மதிப்புற்குரிய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சருக்கு,

இந்தக் கடிதம் உங்கள் பார்வைக்கு வரும் மற்ற கடிதங்களைப் போல அல்ல. இதில் சில உண்மைகள் இருக்கின்றன. சில மோசடிகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் உண்மைகள். நீங்கள் உடனே சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் கீழே...

கடிதம் இந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. எழுதப்பட்ட வரையிலும் குறுக்கில் ஒரு கோடு இழுக்கப்பட்டிருந்தது. நரேந்திரன் அதைப் பாக்கெட்டில் செருகிக் கொண்டான். வாசுதேவனின் கட்டுக்களை ஒவ்வொன்றாக அவிழ்த்தான்.

வாசுதேவனின் உடல் நடுங்கியது. மூச்சு சீராக இல்லாமல் திணறியது. அரை மயக்கமாய் இருந்தது. இவனை எப்படி புல்லட்டில் தூக்கிப் போகப் போகிறேன்? நரேந்திரன் அவனை அள்ளிக்கொண்டு வெளிப்பட்டான் கதவை பழையபடி சாத்திப் பூட்டி விட்டு இறங்கினான்.

புல்லட் இருந்த இடம் வரை நடத்தி வந்ததில் வாசுதேவனுக்கு சற்று தெளிவு பிறந்தது.

"வேண்டாம்... கதகளியும் வேண்டாம், காசும் வேண்டாம்... நான் இப்படியே போய் விடுகிறேன்" என்றான் திடீரென்று.

"உன்னை மிரட்டித் தூக்கி வந்தவனை உனக்குத் தெரியுமா வாசு?"

"ஊம்ஹூம்.. ஆனால் நான்ஸிக்கு ஏற்பட்டதுதான் எனக்கும் ஏற்படும் என்று அவன் மிரட்டினான்"

"சரி, என்னை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார். பைக் ஓடும் பொழுது அந்தக் காற்றிலேயே உன் மயக்கமெல்லாம் கலைந்து விடும்"

## ஒரு தாரிந்தம்! 8

ஹோட்டல் அறையில் அவர்கள் பரபரப்பாக இருந்தார்கள்.

வாசுதேவனைப் பார்த்ததும், கோகுலகிருஷ்ணனின் நெஞ்சிலிருந்து பெருமூச்சு ஒன்று விடுதலையானது. நரேந்திரன் வைஜயந்தியைத் தனியே அழைத்துப் போனான்.

வைஜயந்தி, "தாங்க் காட்" என்றாள். "நீ போய் ரொம்ப நேரம் ஆனதும் நான் பயந்து விட்டேன், நரேன். ஹோட்டல்காரர்கள் என்ன சத்தம், ஏது சத்தம் என்று விசாரித்துக் கொண்டு வந்து விட்டார்கள்... வாஷ்பேஸின் உடைந்து கிடைப்பதைப் பார்த்துவிட்டுப் போனார்கள்..."

"இந்த ஹோட்டல் இனி வேண்டாம், வைஜ். இன்னும் இருபத்து நாலு மணிநேரம் தானே... பேசாமல் டிஸ்ஜ ஆபீஸிற்கே கூட்டிப் போய் விடலாம் என்று நினைக்கிறேன்... ஜானகந்தரையும் துணைக்கு இருக்கச் சொல்லலாம். மெட்ராஸில் நவேத் எங்கே தங்கியிருக்கிறான் என்று தெரிந்து விட்டது. வைஜ். பாலராஜிடம் சொல்லி அவனையும், அவனோடு காரில் வந்தவனையும் மடக்க ஏற்பாடு செய்ய வேண்டும்..."

"நரேன்... நீ வருவதற்கு கொஞ்ச நேரம் முன்னால் மூன்று தடவை போன் வந்து விட்டது நீலமோகனனுக்கு..."

"யாரிடமிருந்து?"

"பேசுவது யார் என்று சொல்ல மறுத்து விட்டார்கள். நீலமோகனன் இருக்கிறாரா? இல்லையென்றதும் டொக் என்று ரிசீவரை வைத்து விடுகிறான்..."

"நீலமோகனிடமிருந்து ஏதாவது தகவல் உண்டா?"

"அவரிடமிருந்து நேரடியாக ஒன்றுமில்லை. ஆனால் காவலுக்கு இருக்கிற கான்ஸ்டபிள் போன் செய்தார்..."

"என்னவாம்?" நான்ஸிக்கு ஏதாவது ஆபத்தோ என்று நரேந்திரன் நெஞ்சம் பதறியது.

"நான்ஸி உன்னுடன் பேச விரும்புகிறாள் போலிருக்கிறது... நீ வந்ததும் நர்ஸிங் ஹோமிற்கு போன் பண்ணச் சொன்னார்களாம்"

நரேந்திரன் போனை அருகே இழுத்து, ரிசப்ஷனில் நர்ஸிங் ஹோம் நம்பர் கொடுத்து தொடர்பு தரச் சொன்னான்.

"ஸ்பெஷல் வார்டு - நான்ஸியிடம் பேச வேண்டும்... நான்ஸி... ஹவ் ஆர் யூ?"

"பெட்டர்" என்றாள், நான்ஸி. குரல் மிக பலவீனமாயிருந்தது.

"நீலமோகனன் பக்கத்தில் இருக்கிறாரா?"

"இல்லை, மருந்து வாங்கி வரப் போனார்... நரேன்..." குரல் தாழ்ந்து ரகசியமாக ஒலித்தது. "இனியும் மறைக்கக்

கூடாது... உங்களிடம் எல்லா உண்மைகளையும் சொல்லி விடுகிறேன்"

"ரொம்ப நேரமாக இந்த வார்த்தையைத் தான் எதிர்பார்த்தேன்... யாராவது என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருப்பதையெல்லாம் சொல்லிவிட்டால் நல்லது என்று நினைத்தேன்..."

"போனில் வேண்டாம், நரேன்... நேரில் வாருங்கள்... உடனே"

"கிவ் மீ ஸம் டயம். இவர்களையெல்லாம் ஈகிள்ஸ் ஐ ஆபீஸில் கொண்டு இறக்கி விட்டு வருகிறேன்..."

"நான் காத்திருப்பேன்"

"கான்ஸ்டபிள் இருந்தால் கொடு, நான்ஸி... சார், நான் நரேந்திரன் பேசுகிறேன்... நான் அரை மணி நேரத்திற்குள் அங்கு வந்து விடுவேன்... அதுவரை நான்ஸியை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்..."

போனை வைத்துவிட்டு திரும்பினான்.

"வைஜ்... அந்த போட்டோ எங்கே?"

வைஜயந்தி போட்டோவை நீட்டினாள்.

"இந்த ஆள் யார் என்று அடையாளம் தெரிந்து விட்டது, வைஜ்"

"யார் நரேன்?"

"நவேத். இந்த ஆளுடைய மீசையை எடுத்துவிட்டு, கண்ணாடியை விலக்கி விட்டு, வலது கண்ணை மூடி தைத்து விட்டால், நவேத்திற்கு வெகு நெருக்கமாக வந்து விடுவான்..."

"நான்ஸியைக் கேட்டால் நவேத் யாரென்று தெரிந்து விடும் என்கிறாய்..."

"ஆமாம்... அப்படி நான்ஸி சொல்லா விட்டால் ஷாகுந்தலாவைக் கடைசியாகக் கேட்கலாம்"

ரிசப்ஷனைக் கூப்பிட்டு பில்லை ரெடி பண்ணச் சொல்லிவிட்டு, ஒரு டாக்ஸியைக் கூப்பிடச் சொன்னான் நரேந்திரன்.

எல்லோரையும் ஈகிள்ஸ் ஐ ஆபீஸில்



விட்டுவிட்டு பால்ராஜிற்கு இரண்டு போன்கள் செய்துவிட்டு, நரேந்திரன் புல்லட்டை எஸ்.ஜே. நர்ஸிங் ஹோமை நோக்கித் திருப்பினான்.

நர்ஸிங் ஹோமில் அந்த நேரத்தில் உள்ளே விட மறுத்த வாட்ச்மேனிடம் தான் யாரென்று விளக்கிச் சொல்லி கதவு திறக்க வைத்தான்.

ஆஸ்பத்திரி அமைதியாய் இருந்தது. நரேந்திரனின் ஷூக்கள் மட்டும் தனியே ஒலி எழுப்புவது போல் இருந்தது. ஸ்பெஷல் வார்டு முதல் மாடியில் இருந்தது. நரேந்திரன் மூன்று படிகள்தான் ஏறியிருப்பான். அப்போது அந்த சத்தம் கேட்டது.

சிலீர் என்று பாட்டில் ஒன்று கீழே விழுந்து நொறுங்கும் சத்தம். உடனே இன்னொரு கண்ணாடி நொறுங்கும் சப்தம்.

"ஐயோ!" என்று ஒரு கூச்சல். நீலமோகனனுடைய குரல்.

நரேந்திரன் படிகளை தாவி ஏறினான். எங்கிருந்தோ இரண்டு நர்ஸ்கள் உற்பத்தியாகி நரேந்திரனின் பின்னே தபதபவென்று ஓடி வரலானார்கள்.

ஸ்பெஷல் வார்டிலிருந்து கான்ஸ்டபிள் பரபரப்பாக வெளியே ஓடி வந்து நேரே நரேந்திரனின் மீது மோதினார்.

"என்ன ஆயிற்று?"

"போன்.. போன் செய்துவிட்டு வருகிறேன் சார்..." கான்ஸ்டபிள் ஓடினார்.

அறைக்குள் நுழைந்ததும் நரேந்திரன் அதிர்ந்து நின்றான்.

நான்ஸியின் கழுத்து கட்டில் முனையில் இல்லாத கோணத்தில் மடங்கியிருந்தது. அவளது உயிரற்ற தலை தொங்கியது. அவளுக்கு ட்ரிப்ஸ் ஏற்றிக் கொண்டிருந்த பெரிய பாட்டில் கர்ப்பம் உடைந்து கீழே சிதறியிருந்தது. நீலமோகனன் கட்டிலில் மண்டையை மோதிக் கொண்டிருந்தார்.

நரேந்திரனைப் பார்த்ததும், "நரேன்... அவனைப் பிடி நரேன்.. அந்தக் கொலை

காரனைப் பிடி...” என்று கத்தினார். ஜன்னல் பக்கம் காட்டினார். ஜன்னல் திறந்து ஒரு கண்ணாடி உடைந்திருந்தது. நரேந்திரன் ஜன்னலுக்கு ஓடினான். கீழே எட்டிப் பார்த்தான். அண்ணாந்து பார்த்தான். எங்கும் இருள்தான் ஆக்கிரமித்திருந்தது.

“யார் வந்தது சார்?”

“அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரன் தான்...” நீலமோகனின் மூச்சு பதட்டத்தில் திணறியது. அவர் தலை கலைந்திருந்தது. சட்டை மார்பில் கிழிந்திருந்தது. நான் கட்டில் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தேன். கண்ணயர்ந்து விட்டேன் போலிருக்கிறது. திடீரென்று விழிப்பு வந்தது. பார்த்தால் டாக்டர் போல் வெள்ளை டிரஸ் போட்டுக் கொண்டு அவன் நான்ஸி மீது குனிந்திருந்தான். டேய், என்னடா செய்கிறான் என்று அவன் மீது பாய்ந்தேன். என்னைப் பிடித்துத் தள்ளினான். நான் மோதி ட்ரிப்ஸ் பாட்டில் விழுந்தது. அவன் சட்டென்று ஜன்னல் வழியே வெளியேறி விட்டான். அந்த வழியில்தான் உள்ளே வந்தானா என்றும் தெரியவில்லை. சுட்டது போதாது என்று கழுத்தை நெறித்தே கொன்று விட்டான்”

நரேந்திரன் அறைக்கு வெளியே பாய்ந்தான். அதற்குள் அவன் எப்படி மாயமாய் மறைந்தான்?

நவேத் எங்கும் இல்லை.

மொட்டைமாடிக் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு கட்டிடத்தின் நாற்புறமும் பார்த்தான்.

நவேத் தென்படவில்லை. கான்ஸ்டபிள் நான்ஸியின் அறை வாசலில் நின்று நைட் டூட்டி டாக்டர்களையும், நர்ஸ்களையும் அதட்டிக் கொண்டிருந்தார்.

“ஸ்டேஷனுக்குப் போன் செய்து விட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள்”

நரேந்திரன் அவர் சொன்னதைக் காதில்



வாங்கினான்.

அறைக்குள் நுழைந்தான்.

நான்ஸியின் கழுத்து எலும்பு முறிந்திருக்க வேண்டும்.

கழுத்தை நெறித்தவன் அவளுடைய தலையை இரக்கமில்லாமல் பின்னே இழுத்திருக்க வேண்டும்.

‘உங்களிடம் எல்லா உண்மைகளையும் சொல்லி விடுகிறேன்’

என்ன உண்மைகளைச் சொல்ல இருந்தாய் நான்ஸி?

உன்னைப் பற்றியா? நவேத்தைப் பற்றியா? இல்லை உங்கள் இருவரைப் பற்றியா?

நான்ஸியின் நீளமான விரல் நுனியில் சிக்கியிருந்த இரண்டொரு நூல்கள் நரேந்திரனின் கவனத்தைக் கவர்ந்தன. கொலையாளியுடன் போராடிய போது வந்திருக்க வேண்டும். அதில் ஒன்றை எடுத்து தன் விரலில் சுற்றிக் கொண்டான். கீழே பீடிகள் சிதறிக் கிடந்தன. நீலமோகனனின் பீடி. கொலையாளியைத் தடுக்க முயற்சித்து அவர் தள்ளப்பட்டபோது, பாக்கெட்டிலிருந்து சிதறியிருக்க வேண்டும்.

பூட்ஸ்கள் ஒலி கேட்டது.

இன்ஸ்பெக்டர் மற்றும் தடயவியல் நிபுணர்கள்.

“நரேன்!” நீலமோகனனின் குரலில் கரகரப்புடன் கூடிய உறுதி இருந்தது. கண்கள் சிவந்திருந்தன!

“என்ன சார்?”

“நான்ஸியைப் புதைத்தாயிற்று... அவள் சாவு எனக்குள் ஒரு வைராக்கியத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது... இன்றைக்கு இந்திய விழாவில் எங்கள் குரூப் டான்ஸிற்குத்தான் அதிக கை தட்டல்கள் வந்தாக வேண்டும். எந்த புரோகிராமை நிறுத்துவதற்காக, தடை செய்வதற்காக, அந்த நவேத் சதி செய்கிறானோ, அதை

நாங்கள் வெற்றிகரமாக நடத்திக் காட்ட வேண்டும்"

வைஜயந்தி ஷாகுந்தலாவைத் தனியே பால்கனிக்கு அழைத்துப் போயிருந்தாள். அந்த போட்டோவை அவளிடம் எடுத்து நீட்டினாள்.

"நீதானே இதைக் கிணற்றில் போட்டாய்"

"ஆமாம்... அன்றைக்கும் நான்ஸிதான் இதை என்னிடம் கொடுத்தாள். இதை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடு என்றாள். அவ்வளவுதான் தெரியும் எனக்கு..."

"பொய் சொன்னாயோ..."

"இல்லை, சத்தியமாய்த் தெரியாது" அவள் குரல் நடுங்கியது.

அவள் கொடுத்த விளக்கம் பொருத்தமாய் இருந்தது போல் பட்டது வைஜயந்திக்கு. போட்டோவை கோகுலகிருஷ்ணனிடம் நீட்டினாள்.

அவன் முகத்திலும் இருள் கடந்து போன மாதிரி இருந்தது. மேனேஜரின் சம்சாரத்தை இன்னொரு இளைஞனுடன் பார்த்த திடுக்கிடலாய்க் கூட இருக்கலாம். அவனும் தலையை இடதும் வலதுமாக அசைத்தான்.

"வைஜ்!" என்று நரேந்திரன் கூப்பிடுவது காதில் விழுந்தது.

நரேந்திரன் நீலமோகனனுக்கு எதிரே நின்றிருந்தான்.

"வைஜ், அந்த போட்டோவை சாரிடம் கொடு..."

நீலமோகனன் குழப்பமான முகத்துடன் போட்டோவை வாங்கிக் கொண்டார்.

"நான்ஸியுடன் இருப்பது யார் தெரிகிறதா, சார்? நவேத்!"

அவருடைய முகத்தில் கன்னத்து தசை தனியே துடித்தது.

"இப்பொழுதும் அவனைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்று அடம் பிடிக்கப் போகிறீர்களா?"

நீலமோகனன் நரேந்திரனின் மேஜை மீது



தலையை கவிழ்த்துக் கொண்டார்.

"நீங்கள் முழு உண்மையைச் சொல்லாத நிலையில் நான் எப்படி சார் உங்களோடு ஒத்துழைக்க முடியும்?"

நீலமோகனன் நிமிர்ந்தார். நரேந்திரனின் கண்களைப் பார்க்காமல், பேசினார் "நான் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்னால் நான்ஸிக்கு வேறு யாருடனோ தொடர்பு இருந்தது என்று எனக்கும் லேசுபாசாகத் தெரியும்... ஆனால் அதைப் பற்றி நான் எதுவும் அவளிடம் கேட்டதில்லை... அவளும் சொன்னதில்லை... எங்கள் மையழி குரூப் பிற்கு நிறைய புரோக்கிராம்கள் வந்ததும் பொறாமைப் பட்டவர்களில் அவனும் ஒருத்தன்... நீ நிறையத்தான் சம்பாதிக்கிறாயே, எனக்கும் கொடு என்று நான்ஸியை நச்சரிக்க ஆரம்பித்தான். ஒரு ஸ்டேஜில் நான்ஸி என்னைக் கூப்பிட்டு எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டாள். அதற்கப்புறம் அவனை நானே டீல் செய்து கொள்கிறேன் என்றேன். முதலில் பத்தாயிரம் கொடுத்தேன். அவனுக்கு திருப்தி வரவில்லை.... மறுபடி மறுபடி கேட்டான். என்னைப் பற்றியும், நான்ஸியைப் பற்றியும் இந்த ஊருக்கெல்லாம் சொல்லி விடுவேன் என்று மிரட்டினான். மெட்ராஸில் புரோகிராம் எப்படி நடக்கும் பார்க்கிறேன் என்று சவால் விட்டான்.. அதனால்தான் உன்னை எங்கள் பாதுகாப்பிற்குக் கூப்பிட்டேன்"

"இத்தனை நாள் ஏன் மறைத்தீர்கள்? முதலிலேயே சொல்லியிருந்தால், அவனுடைய பின்னணி என்ன என்று ஆராய்ந்து அவனை மடக்கியிருக்கலாம்"

"பிரைவேட் டிடக்டிவ் ஏஜன்ஸிகளிலும் ஏமாற்றுக்காரர்கள் இருக்கிறார்கள். நம்மைப் பற்றிய ரகசியத்தை வைத்து நம்மையே பிளாக்மெயில் செய்வார்கள் என்று நான்ஸி பயமுறுத்தியிருந்தாள். அதனால்தான் உன்னிடம் சொல்லவில்லை... இனிமேலும் மறைப்பதில் அர்த்தமில்லை..."

"நவேத்தைப் பற்றி வேறென்ன தெரியும் உங்களுக்கு?"

"அவன் எங்களை நிழல் போல் துரத்திக் கொண்டிருந்தான். பணம்... பணம்.. பணம் தான் அவனுக்கு கவனம். நான்ஸியை நான் அதிகம் கேள்விகள் கேட்டால் அவள் சங்கடப்படுவாளோ, என்று கேள்விகள் கூட கேட்டது கிடையாது..." நீலமோகனன் பார்வையை உயர்த்தினார், "இன்றைக்கு விழாவில் அவன் கலாட்டா பண்ணாமல் பார்த்துக் கொள், போதும்..."

நரேந்திரன் அவரை விட்டுவிட்டு வெளியே வந்தான்.

## ஒரு துரித்தம்! 9

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட்டை ஊதினார். தலையை இடதும், வலதுமாக அசைத்தார்.

"நவேத் கிடைக்கவில்லை. ரூமிற்கு அவன் திரும்பவேயில்லை. நீ அடையாளம் சொன்ன ஃபியட் கார் அனாதையாக அபிராமி தியேட்டர் கார் பார்க்கிங்கில் நின்றிருந்தது. ஓனர் கார் திருடு போனதாக நேற்றுதான் கம்ப்ளெயின்ட் செய்திருந்தார்."

"பால்ராஜ்... உங்களிடம் சில உண்மைகளைச் சொல்லப் போகிறேன்" என்றான் நரேந்திரன். மேஜையில் கைகளை ஊன்றி, இன்றைக்கிரவு நடக்கப்போகும் இந்திய விழாவில் கதகளி அயிட்டம் வரும்போது ஒரு பிரச்சினையை எதிர்பார்க்கிறேன்"

வாசுதேவன், கோகுலகிருஷ்ணன் இருவரைப் பற்றியும், நீலமோகனனின் மனைவியாயிருந்த நான்ஸியைப் பற்றியும், அவர்களை துரத்திக் கொண்டிருந்த நவேத் பற்றியும் விபரமாக சொன்னான்.

"நவேத் வாசுதேவனைக் கடத்திப் போனபின் ஹோட்டலுக்கு நீலமோகனனுக்கு இரண்டு மூன்று முறை போன் வந்தது என்றார். அந்த நேரத்தில் அவர் ஆஸ்பத்திரியில் இருந்ததால், பேசவில்லை. போன் செய்தது நவேத்தாகத் தான் இருக்க வேண்டும். வாசுதேவனைக் காட்டி பணம் பறிக்க நினைத்திருப்பான். அது முடியாமல் போனதும், போலீஸ் காவலை மோப்பம் பிடித்து ரூமிற்கே திரும்பாமல் இருந்து விட்டான். திறந்த வெளி அரங்கம். ஆயிரக் கணக்கில் ஆட்கள் கூடப் போகிறார்கள். அதில் அவனும் இருக்கலாம். அதனால் செக்யூரிட்டியைக் கொஞ்சம் உஷார்ப்படுத்த வேண்டும்"

"சென்ட்ரல் மினிஸ்டர் வருகிறார் என்பதால், ஏற்கனவே ஹெவி செக்யூரிட்டி போட்டிருக்கிறோம்"

"நவேத்திற்கு வலது கண் கிடையாது, பால்ராஜ். அந்த அடையாளத்துடன் யாரையும் உள்ளே விட வேண்டாம் என்று சொல்லுங்கள்"

"நடக்கிற காரியமா, நரேன். கூலிங்கிளாஸ் போட்டிருக்கிறவர்களை எல்லாம் கண்ணாடியைக் கழற்றிக் காட்டச் சொன்னால், ரகளையாகிவிடும்"

"ஆடியன்ஸ் பக்கம் செக்யூரிட்டி எப்படியோ, ஆர்ட்டிஸ்ட்கள் தங்கும் மேடைப்பகுதியிலாவது ஸ்ட்ரிக்ட்டாக இருக்கலாம் பால்ராஜ்.. ஒவ்வொருவருக்கும் ஒரு அடையாள அட்டை கொடுத்து அதைக் காட்டினால்தான் உள்ளே வரலாம், வெளியே போகலாம் என்று ஏற்பாடு செய்யலாம்"

"குட்.... ஐடியா" என்றார். "அப்புறம் நீ கேட்ட விவரத்தையும் இன்றிரவுக்குள் ஃபாரன்ஸிக் லேபின் சொல்லி விடுவார்கள்"

எழும்பூர் நேரு ஸ்டேடியம்.

சினிமா நட்சத்திரங்கள் பங்கு கொள்ளும் விழா என்பதாலோ என்னவோ கூட்டம் நெரித்தது.

மேடைக்கு போகும் வழியில் ஒரு கான்ஸ்டபிள் நிறுத்தப்பட்டார். வெவ்வேறு குழுக்களுக்கு தனித்தனி மேக்கப் ரூம்கள்

தர வசதியில்லாத காரணத்தால் விழாவில் பங்கேற்க வந்த குழுவினருக்கு பின்புறம் தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந் தன.

மேடைக்குள் பிரவேசிப்பதற்கும், வெளி யேறுவதற்கும் பிரத்யேக அடையாள அட்டை முக்கியமானவர்களுக்கு மட்டும் தரப்பட்டிருந்தது.

நரேந்திரன் சுறுசுறுப்பாயிருந்தான்.

குழுக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூடாரங்கள் இருந்த சிறு மைதானத்தில் தனி கேட் இருந்தது. அதன் வாசலில் நின்றிருந்தான். ஒரு நீலநிற வேன் வந்து நின்றது. அதிலிருந்து ஒருவன் இறங்கி னான். "மையழி குருப் நீலமோகனனைப் பார்க்க வேண்டும்"

நெற்றியில் சந்தனக்கீற்று, வேட்டி, சட்டை.

"யார் நீ?"

"கதகளி டான்ஸிற்கு மியூஸிக் வாசிக்க வேண்டியவர்கள்"

"வெயிட் ஹியர்..." என்றான் நரேந்திரன். நீலமோகனனைக் கூப்பிட்டான்.

"சாரே, நமஸ்காரம்..."

"இவ்வளவு லேட்டாகவா வருவது?" என்றார் நீலமோகனன். வேனிற்குள் ஏறி, அவர் குழுவிற்கு வாத்தியம் வாசிப்பவர் களை மட்டும் அடையாளம் காட்டி இறங்கச்சொன்னார். ஒவ்வொருத்தருக்கும் உடனடியாக அடைய்ாள அட்டை கொடுக் கப்பட்டது.

"வாசுதேவன், கோகுலகிருஷ்ணன் சாரெல்லாம் நோக்கலாமா சார்?"

நீலமோகனனின் முகம் கோபமானது. "அதெல்லாம் யாரையும் நோக்க வேண்டாம். மேடையில் பார்த்துக் கொள்ளலாம். அவர் கள் மேக்கப் போட்டுக் கொண்டிருக்கிறார் கள்"

ஏழு மணிக்கு முதல் அயிட்டமாக பரத நாட்டியம் துவங்கியது.



நரேந்திரன் கூடாரத்திற்கு திரும்பினான்.

வாசுதேவனும், கோகுலகிருஷ்ணனும் கீழே படுத்திருந்தார்கள்.

அவர்கள் முகத்தில் எண்ணெய் பூசி, பெயிண்ட் பூசப்பட்டுக் கொண்டிருந்தது. அசையாமல் கொள்ளாமல் என்ன கொடுமை இது என்று நினைத்தாள் வைஜயந்தி.

நீலமோகனன் ஓரிடத்தில் உட்காராமல் மிகவும் டென்ஷனாக இங்கும் அங்கும் நகர்ந்து கொண்டிருந்தார்.

வாசுதேவனின் உடலில் மெல்லிய நடுக் கம் இருப்பதாக நரேந்திரனுக்கு தோன்றியது.

"நீலமோகனன் என்பவர் யார்?"

கூடாரத்து வாசலில் குரல் கேட்டது. கான்ஸ்டபிள் ஒருவர் நின்றிருந்தார்.

"நான்தான்"

"உங்களைத் தேடிக் கொண்டு யாரோ வந்திருக்கிறார்கள்"

"நான் போய் பார்க்கிறேன்" என்றான் நரேந்திரன்.

நீலமோகனனுக்கு நிறைய வியர்த்து விட்டது. "வேண்டாம் நரேன். இவர்களுக்கு தான் காவல் முக்கியம்... நீ இங்கேயே இரு... நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்.."

அவர் வேகமாக வெளியேறினார்.

வாசுதேவன் கண்களை மட்டும் சுழற் றினான். அவன் நிச்சயம் பயந்திருந்தான் என்று தோன்றியது.

நரேந்திரன் கூடாரத்து வாசலில் நின்று நீலமோகனனைப் பார்வையால் தொடர்ந் தான்.

கேட்டுக்கு வெளியே ஒரு டாக்ஸி நின்றிருந்தது.

நீலமோகனன் குனிந்து பார்த்துவிட்டு, பின்கதவைத் திறந்து டாக்ஸிக்குள் ஏறினார்.

டாக்ஸியில் அவர் குழுவுக்கு மியூசிக் வாசிக்கிறவன், லைட்டிங் செய்பவன் யாராவது வந்திருக்கக் கூடும். அடையாளம் புரிந்து கொள்ள அவர் ஏறுகிறார் என்று அவன் நினைத்தான்.

ஒரு முழு நிமிடம் கழித்து டாக்ஸிக் கதவு திறந்தது. நீலமோகனன் இறங்கினார். பின்னாலேயே கருப்பு பர்தா போட்டு உடலும், முகமும் மறைத்து ஒருத்தி இறங்கினாள்.

நீலமோகனன் கேட்டில் இருந்த கான்ஸ்டபிளிடம் சொல்லி அவளுக்கும் ஒரு அடையாள அட்டை அவருடைய உத்திவாதத்தின் பெயரில் வாங்கினார்.

கூடாரத்தை நோக்கி நடத்தி வந்தார். ஜல்ஜல் என்று கொலுசு முதலில் சப்தமிட்டது. உடை முழுக்க மூடியிருந்தாலும் அந்தப்பெண் உடம்பை நெளித்து, நெளித்து உருட்டி உருட்டி வெகு ஸ்டைலாக நடந்து வந்தது.

நரேந்திரனின் அருகில் வந்ததும், "மிஸ் பமீலா" என்றார் நீலமோகனன். "கதகளி பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது. நம் ப்ரோக்ராம்கள் எதையும் மிஸ் பண்ணாது..."

நரேந்திரன் கைகளைக் கூப்பினான்.

அந்தப் பெண்ணின் கைகள் கருப்புத் துணிக்கு வெளியே வந்தன. கூப்பின. வளையல்கள் சிலுங் என்று சப்தமேற்படுத்தின.

"இவளை ஆடியன்ஸில் முதல் வரிசையில் உட்கார வைத்துவிட்டு வருகிறேன்" என்றார் நீலமோகனன்.

பின்னழகை உருட்டி உருட்டி அந்தப் பெண் நீலமோகனுடன் நடந்து போனது.

அவர்கள் பார்வையிலிருந்து மறைந்ததும், நரேந்திரன் வைஜயந்தியைப் பார்வையாலேயே அழைத்தான்.

"வைஜ்... ரொம்ப கவனமாக இவர்களைப் பார்த்துக் கொள்... நான் இதோ வந்து விடுகிறேன்"

அதற்குள் நீலமோகனனும், அந்தப் பெண்ணும் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை.

நரேந்திரன் நடையில் சற்று வேகம் காட்டினான்.



மேடையின் பின்புறம் இருந்த கேட்டை நெருங்கி தன் அடையாள அட்டையைக் காட்டினான் நுழைந்தான்.

"தீம்தரிகிட தரிகிட தரிகிட" என்று நட்டுவாங்கம் ஒலித்துக் கொண்டிருக்க, பின்னால், பம்பரச் சாட்டை போல் சுழன்று அடிக்க ஒரு பெண் பாதம் ஆடிக் கொண்டிருந்தது. சிகப்பு, மஞ்சள், நீலம், மஞ்சள், நீலம் என்று வர்ணங்கள் மாறி மாறி அவன் மீது வெளிச்சம் அடித்துக் கொண்டிருந்தன.

நரேந்திரன் முதல் வரிசையை, இரண்டாவது வரிசையை, மூன்றாவது வரிசையைப் பார்த்தான். அந்தப் பெண்ணைக் காணவில்லை.

கான்ஸ்டபிளிடம் விசாரித்தபோது, எந்த முஸ்லீம் பெண்ணும் சமீபத்தில் அந்த வாசல் வழியே அனுமதிக்கப்படவில்லை என்றார்.

நரேந்திரன் வந்த வழியில் திரும்பினான். கூடாரத்திற்கு ஓடினான். மேக்கப் முழுவதும் மும்முரமாய் நடந்து கொண்டிருக்க, அங்கேயும் நீலமோகனனைக் காணவில்லை. வைஜயந்தி மண் தரையில் விரலால் எழுதிக் கொண்டிருந்தாள்.

நவேத் - NAVED

நரேந்திரன் அந்த எழுத்துக்களைப் பார்த்தான். அவன் மண்டைக்குள் மின்னல் வெடித்தது. இது ஏன் எனக்குத் தோன்றாமல் போயிற்று? ஓடினான். கதகளியின் இசைக் குழு இருந்த கூடாரத்திற்குள் நுழைந்து ஜெண்டை வாசிப்பவனைக் கூப்பிட்டான்.

"வாசுதேவனைப் பார்க்க வேண்டும் என்றாயே, வருகிறாயா?"

"ஓ" அவன் சந்தோஷத்துடன் நரேந்திரனைத் தொடர்ந்தான்.

அவனைப் பார்த்ததும், கோகுலகிருஷ்ணனின் விழிகள் விரிந்தன. வாசுதேவனிடம் எந்த சலனமும் இல்லை. வைஜயந்தி நிமிர்ந்து பார்த்தாள்.

"வாசுதேவன் எவ்விட?" என்றான் ஜெண்டை.

"இங்கே இல்லை?"

"இல்லையே, கோகுலகிருஷ்ணனை தான் ஞான் அறியும்..."

"சரி, நீ வா..." அவனைத் தாதாவென்று இழுத்துக் கொண்டு போய் அவன் கூடாரத்திலேயே விட்டுவிட்டு நரேந்திரன் அந்தப் பிரதேசத்தை பார்வையால் மேய்ந்தான்.

அங்கங்கே கூடாரங்கள் இருக்க, அவற்றிற்கு மிகுந்த வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டு மேலே வெள்ள விளக்குகள். ஆனால் கூடாரங்களின் பின்னே சிறிய இடைவெளி விட்டு இருந்த மரங்கள் அருகே வெளிச்சம் தோய்ந்திருந்தது.

நரேந்திரன் அந்தப்பக்கம் ஓடினான்.

அதோ!

இரண்டு மரங்களின் நடுவில் குறுக்காக அவள் கிடந்தாள்.

கறுப்பு பர்தா போட்ட பெண்மணி.

நரேந்திரன் அவளைப் புரட்டினான். நெஞ்சிலிருந்து துருத்தியிருந்த கத்தி சிவப்பாகியிருந்தது. ரத்தம் கறுப்பு உடையையும் கறைப்படுத்திக் கொண்டிருந்தது.

நரேந்தின் முகத்து துணியை விலக்கினான். அவன் எதிர்பார்த்தபடியே நவேத்.

மூச்சு திணறித் திணறி வந்து கொண்டிருந்தது. ஒற்றைக் கண் நரேந்திரனைக் களைப்போடு பார்த்தது.

"நீலமோகனன்... ஒளிந்திருக்கும் இடத்தைவிட்டு வெளியே வாருங்கள்" நரேந்திரன் ரகசியமாக கூப்பிட்டான்.

"அசையாதே..." என்றார் நீலமோகனன், ஒரு மரத்தின் பின்னிருந்து உருவாகி. அவர் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது.

நரேந்திரன் இரண்டு கைகளையும் உயர்த்தினான். தாழ்வான கிளை ஒன்று கைகளில் தட்டுப்பட்டது.

நீலமோகனனின் முகம் அந்த அரை குறை வெளிச்சத்தில் கதகளி ஆடியது. பயம், ருத்ரம், இயலாமை, குழப்பம் என்று அத்தனை ரகங்களும் அவர் முகத்தில்



நிழலாடின.

நரேந்திரன் இரண்டு கைகளாலும் கிளையைப் பற்றி, திடீரென்று கால்களை உயர்த்தி காற்றில் ஊஞ்சலாடி, அவர் நெஞ்சை இரு கால்களாலும் உதைப்பான் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. அவர் அப்படியே பல்டி அடித்து மல்லாந்தார்.

## 10

நரேந்திரன் வைஜயந்தியின் கைகளைப் பற்றி குலுக்கினான்.

"கடைசி நிமிடத்தில் எனக்கு க்ளூ கொடுத்தது நீதான்" என்றான்.

"என்ன சொல்லுகிறாய், நரேன்?"

"நவேத் - NAVED என்று எழுதினாயோ... இங்கிலீஷில் எழுத்துக்களை வலமிருந்து படி - DEVAN தேவன்... வாசுதேவன்"

"நவேத்... ஸாரி தேவன் எப்படியிருக்கிறான் நரேன்?"

"பிழைத்துக் கொண்டான். அவனிடமும், கோகுலகிருஷ்ணனிடமும் விசாரித்ததை எல்லாம் வைத்துக் கதையை நான் ஒரு மாதிரி அமைத்து விட்டேன்... சொல்லட்டுமா?"

"சொல்லப்பனே..." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ், சிகரெட் புகையை நீலமோகனனின் பக்கம் ஊதி.

இரண்டு கைகளையும் சேர்த்து விலங்கு மாட்டிய நிலையில் நீலமோகனன் தன் இருக்கையில் நெளிந்தார்.

"நீலமோகனன் நான்ஸியைக் கல்யாணம் செய்து கொண்டபோதே, இவ்வளவு வயது வித்தியாசம் இருக்கிறதே என்று யோசித்திருக்க வேண்டும். நான்ஸிக்கு சாதாரணமாகவே சபல உடம்பு.

"மையழி குருப்பில் கதகளியில் எக்ஸ்பர்ட்டாக இருந்த வாசுதேவன் அவளுக்கு ரொம்பப் பிடித்தவனானான். ஆரம்பத்தில்

அரசல் புரசலாக இருந்து. ஊரளவிற்கு வெளியாகி, காதலாகிவிட்டது. இருவரும் திருட்டுத்தனமாய் போய் போட்டோ எடுத்துக் கொள்கிற வரைக்கும் போய் விட்டது. அந்தப் போட்டோவை ஷாகுந்தலாவிடம் கொடுத்திருந்தாள் நான்ஸி. அவ்வப்போது ரகசியமாய்ப் போய்ப் பார்ப்பதோடு சரி...

"வாசுதேவன், கோகுலகிருஷ்ணன் இவர்களுடைய கதகளி நாட்டியம் கிடுகிடுவென பிரபலம் ஆனது. டெல்லி தூர்தர்ஷனின் லட்ச ரூபாய்க்கு ஸ்பான்சர் பண்ணுகிறவர்களுடன் காண்ட்ராக்ட் போட்டாயிற்று. வெளிநாடுகளில் எல்லாம் போய் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்னொருபுறம் கையெழுத்து போட்டாயிற்று. மையூதி குரூப்பின் மேனேஜர் என்ற முறையில் காண்ட்ராக்டில் கையெழுத்து போட்டதெல்லாம் நீலமோகனன்தான். இந்த நிலைமையில் அவருடைய கவனத்திற்கு நான்ஸியின் கள்ளக்காதல் வந்தது.

"கோபமெல்லாம் வாசுதேவன் மீது திரும்பியது. குடித்துவிட்டு அவனுடன் சண்டை போட்டார். அதில் பாட்டிலை உடைத்து அவன் முகத்தில் குத்தியதில் அவனுடைய வலது கண்ணில்பட்டு, விழி கிழிந்து விட்டது. ஒரு கண் குருடாகி விட்டது. கதகளியில் முக்கியமான அங்கமே கண்தான். ஒரு கண் இல்லாமல் வாசுதேவனால் இனிமேல் கதகளி ஆட முடியாது. அப்படியானால், தூர்தர்ஷன் காண்ட்ராக்ட்? வெளிநாட்டு புரோகிராம்கள்? நீலமோகனனுக்கு அத்தனை பணத்தையும் இழக்க மனம் வரவில்லை.

"யோசித்தார், புத்தி குறுக்கில் வேலை செய்தது. கதகளியில் முகம் நிறைய பெயிண்ட் பூசி கிட்டத்தட்ட அடையாளம் எல்லாம் மறைந்து விடும். ஏன் இன்னொரு கதகளி ஆட்டக்காரனை வாசுதேவனாக செட்டப் செய்யக்கூடாது? கிட்டத்தட்ட



"வாசுதேவன் உயரம், பருமன் இருந்த இன்னொருத்தன் நமக்கெல்லாம் இத்தனை நாள் வாசுதேவன் என்று அறிமுகப் படுத்தப்பட்ட இந்த கிருஷ்ணன் குட்டி தேர்ந்தெடுக்கப்பட்டான். இன்னொருத்தன் பெயரில் ஆடுவதா என்று முதலில் அவன் பயந்தான். பணம் இறைக்கப்பட்டதும் ஒத்துக் கொண்டான்.

"உண்மையான வாசுதேவனுக்கு இந்த விவரங்கள் எல்லாம் தெரிய வந்தன. தன் பெயரைச் சொல்லி நீலமோகனன் லட்சம், லட்சமாய் சம்பாதிப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனுடைய அழகை ரசித்துக் கொண்டிருந்த நான்ஸி இப்போது திரும்பிப் பார்க்கவில்லை. மற்றதைத்தான் இழந்துவிட்டோம் கூடிய வரை பணத்தையாவது நீலமோகனனிடமிருந்து கறக்கலாம் என்று முடிவு செய்தான்.

"திருவனந்தபுரத்தில் இருந்தால் அவன் துரத்துகிறான் என்று, நீலமோகனன் தெய்யனூருக்கு தன் குரூப்பின் முக்கியமானவர்களை அழைத்துக் கொண்டு ஓடினார். இஷ்டப்படி அவரை வாசுதேவன் மிரட்ட முடியாது என்று அவனுக்கு பயம் காட்ட ஈகிள்ஸ்ஜாயிலிருந்து நம்மையும் கூட்டிப் போனார்.

"ஒரிஜினல் வாசுதேவன் கதகளி மேக்கப் போட்டு ஆடிய நடனத்தை எனக்கு வீடியோவில் போட்டுக் காட்டி நான் ஏதாவது வித்தியாசம் கண்டுபிடிக்கிறேனா என்று நோட்டம் பார்த்தார்கள். முகம் பூராவும் பெயிண்ட் பூசியபின் என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒருவேளை ஒரிஜினலோடு நான் பழகியிருந்தால் பதிந்திருக்குமோ என்னவோ?

"நீலமோகனன் ஒளிந்து கொள்ள நினைத்தாலும், வாசுதேவன் தெய்யனூருக்கு தேடிக்கொண்டு வந்துவிட்டான். அவன் நீலமோகனனுக்கு மிரட்டல் கடிதம் எழுதியிருந்தானே, அதில் கூட 'வாசுதேவன்

இருக்க மாட்டான். உன்னோடு வா' என்று தான் வாசுதேவன் என்பது போலி செட்டப் என்பதை சென்ட்ரல் மினிஸ்டருக்குக் கூட எழுத நினைத்தான் அவன். நீலமோகனனின் மோசடியைக் காட்டிக் கொடுக்கக் கூடாதென்றால் அதற்கு இவ்வளவு பணம் தர வேண்டும் என்று பேரம் பேசியிருக்கிறான். அந்தத் தொகையில்தான் இருவருக்கும் தகராறு...

"நவேத் என்பவனை நான் கடப் பார்த்தால் தடுப்பார். போலீஸில் சொல்லலாம் என்றால் வேண்டாம் என்பார். இந்த புரோகிராம் முடிந்து வெளிநாடு கிளம்பும் வரையில் அவனைப் பற்றி வெளியே தெரியாமல் இருக்க வேண்டுமென்று விரும்பினார், நீலமோகனன்.

"கிணற்றில் ஷகுந்தலா அந்தப் போட்டோவைப் போட்டது நான்ஸி சொல்லித்தான். நான்ஸிக்கு பணத்தாசை. உண்மையான வாசுதேவனை நான் கண்டு பிடித்து விடுவேனோ என்ற பயம். இருந்த கொஞ்சம் நஞ்சம் ஆசையும் துடைத்து விட்டு போட்டோவை எறியச் சொல்லி விட்டான். அது என் கையில் சிக்கியது.

"நவேத் என்ற பெயரை மாற்றி கொண்ட வாசுதேவனுக்கு நீலமோகனனின் ஒவ்வொரு கட்ட புரோகிராமும் தெரிந்திருந்தது. காரணம் வாசுதேவனாய் நடித்த கிருஷ்ணன் குட்டி, பணத்திற்காக ஆள் மாறாட்டம் செய்தாலும், வாசுதேவனுக்கு பணம் போய்ச் சேரட்டுமே என்ற நல்லெண்ணம் அவனுக்கு முன்கூட்டியே தகவல்கள் கொடுத்தான். ஆனால் அவனையே வாசுதேவன் கடத்தினான். எப்படியாவது நீலமோகனிடமிருந்து பணம் கறக்க வேண்டுமென்று.

"வாசுதேவனுக்கு நான்ஸி மீதிருந்த அன்பு முற்றிலும் மாறி வெறுப்பாகி விட்டது. அவளை ரயில்வே ஸ்டேஷனில் சுட்டுக் கொல்லக் கூட முயற்சி பண்ணினான். உண்மைகளை எல்லாம் சொல்கி



றேன் என்று நான்ஸி போன் பண்ணியதும், நீலமோகனன் பயந்து விட்டார். அவளைக் கழுத்தை நெறித்துக் கொன்று விட்டார். அந்தப் போராட்டத்தில் அவருடைய சட்டையிலிருந்த நூல் நான்ஸியின் கையில் சிக்கிவிட்டது. சட்டை கிழிந்ததும், தலை கலைந்ததும், அவளைக் கொல்ல வந்த நவேதுடன் போராடியதால் என்று கதையை திசை திருப்பிவிட்டார்.

"கதகளிக்கு வாத்தியம் வாசிக்க வந்தவர்கள் வாசுதேவனாய் நடித்த கிருஷ்ணன் குட்டியை மேக்கப் இல்லாமல் பார்த்து விடக் கூடாது என்று அவர் தடுத்த போதுதான் எனக்கு சந்தேகம் வந்தது. கடைசி கட்ட முயற்சிக்காக வாசுதேவன் விழா நடந்த இடத்திற்கே வந்து விட்டதும், நீலமோகனன் ரொம்பப் பயந்து விட்டார். இனிமேலும் பொறுப்பதில் அர்த்தமில்லை என்று அவனைக் கொலை செய்ய முயற்சி பண்ணுகிற அளவிற்கு போய்விட்டார்.

"கடைசியில் என்ன ஆயிற்று பாருங்கள்... புரோகிராமே போட முடியவில்லை" என்றான் கோகுலகிருஷ்ணன்.

"இப்போது எல்லாம் பேசடா பட்டி மவனே" என்று குரைத்தார் நீலமோகனன்.

வைஜயந்தி மட்டும் இதில் கலந்து கொள்ளாமல் போனை எடுத்து டயல் செய்தான்.

"யாருக்கு வைஜ் போன் செய்கிறாய்?"

"கின்னஸ் ரெக்கார்ட் புரோகிராம் பண்ணுகிறவர்களுக்கு" என்றாள் வைஜயந்தி "யாரும் கேஸ் முடிவில் இவ்வளவு நீளமான கதைச் சுருக்கம் இதுவரை கொடுத்திருக்க மாட்டார்கள்..."

முற்றும்